




இந்திரா சௌந்தர்ராஜனின் 75 வது பாக்கெட் நாவல்

## திக்...திக்... திக்! - 1

'ஒரு மனிதனுக்கு நடக்கும் திருமணம், புதுமனை பிரவேசம், பிள்ளைப்பேறு, பதவி ஏற்பு போன்ற பல நல்ல விஷயங்களை விடவும் அவன் மரணம் ஒரு முக்கியமான பதிலாகும். மேற்கண்ட நல்ல விஷயங்களைப் புறக்கணித்த வர்கள் கூட மரணத்தை புறக்கணித்து விடக் கூடாது. மரணம் ஒரு சோக நிகழ்வு தான். மனதை மிக பாதிக்கும் ஒரு சம்பவம்தான். என்றாலும் மரண நிகழ்வில் பங்கேற்கும் போது தான் ஒரு மனிதன் உன்னதமான பித்ரு ஆசிகளைப் பெறுகிறான். பங்கேற்காமல் அலட்சியமாக ஒதுங்கினாலே சாபம் வந்து சேர்கிறது.. இந்த சாபம் சாதாரணமானதல்ல... இது தலைமுறை தலைமுறையாகத் தொடரக் கூடியது!'

கருத்த அந்த தார்ச்சாலையின் இருபுறங்களி லும் அடர்வாய் புளியமரங்கள்! ஒவ்வொரு மரமுமே பார்ப்பதற்கு பூதாகரமாக - ஐம்பது அறுபது வருடங்களாக வளர்ந்து கொண்டே இருப் பவை என்பதை ருசிப்பிப்பது போல் இருந்தன.

புளிய மரத்துக்கும் கொண்டை ஒணானுக்கும் எப்பவுமே நல்ல ராசி உண்டு.

அதே போல புளிய மரத்தில் வந்தடையும் பட்சிக்கூட்டம்... புளியமரத்தின் நிழலில் நிற்பது கூட ஒரு பரம சுகமான அனுபவம்! நின்று கொண்டிருக்கும் போது பலமாய் காற்று வீசினால் சில புளியம்பழங்கள் - அட்சதை தலையில் விழுவது போல விழும். கையில் எடுக்கும் போதே கொடகொடவென்று - உள்ளே புளியம் பச்சை ப்ழுத்து பிசின் கட்டிவிட்டதை உணரலாம்.

விரல்களால் நசுக்கினாலே கூட போதும்... கூடு நொறுங்கிப்போய் புளியம் பழம் பேரீச்சம் பழம் கணக்காக கைகளில் ஒட்டிக்கொண்டு உயிரை வாங்கும். அதன்பின் அதை நாவால் நக்கிச் சுவைப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. அப்படி நக்கிடும் போது உச்சி மண்டையிலும் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டு அது உடம்பு முழுக்கப்பரவி ரோமக்கால்கள் அவ்வளவிலும் ஒரு விறைப்பு!

காத்தாயியிக்கும் அன்று புளியம் பழத்தால் அப்படி ஒரு அனுபவம் ஏற்பட்டு உடம்பெல்லாம் கூச்சமெடுக்க, நின்றபடி இருந்தாள்.

அவளை அண்டி பன்னிரண்டு ஆடுகள்.

சரியான குறும்பு ஆடுகள்.

முடிந்த மட்டும் அவைகளே முன் கால்களைத் தூக்கி தங்கள் உயரத்தைக் கூட்டிக் கொண்டு புளியந்தழைகளை கரித்த வண்ணம் இருந்தன. காத்தாயி தார்ச்சாலைமேலேயே கவனமாக இருந்தாள்.

உச்சியில் இருந்தான் சூரியன்.

எனவே மரத்துக்கு கீழ் பாகம் மட்டுமே திம் மென்று நிழலோடு காட்சி தந்தது. குளுகுளுவென் றும் இருந்தது. ஆனாலும் அங்கே இருந்துகொண்டு ஆடுகளை அணைத்து மேய்ப்பது அவளுக்கு மிக வும் சிரமமான ஒரு விஷயமாகத்தான் இருந்தது. புளியந்தழைக்காக எம்பிய ஆடுகள், அவ்வள வையும் ஆய்ந்து முடித்திருந்தன. அதனால் அவை களை அங்கிருந்து அப்படியே கண்மாய் கரைப் பக்கமாக ஓட்டிக் கொண்டு போனால்தான் அவை களுக்கு தீனி கிடைக்கும் என்றும் தோன்றியது.

புளியமர வேர்த்திண்டு மேல் ஒரு தொரட்டி குச்சியோடு அமர்ந்திருந்தவள் - உட்கார்ந்தது போதும் என்பதுபோல ஆடுகளை பத்திக்கொண்டு கண்மாய்க் கரை பக்கமாக போகத் தொடங்கினாள்.

கண்மாய் ஒன்றும் தொலைதூரத்தில் இல்லை... நூறு தப்படி தூரத்தில் தான் இருந்தது. இடையில் அதை மறைத்தபடி ஒரு சிறு பனங்காடு. அதில் எண்ணி நூற்றியெட்டு பனைமரங்கள்!

'நூத்திஎட்டாங்காட்டு பனந்தோப்பு' என்பது தான் அதற்கு பெயரே..... அந்த பனங்காட்டை தாண்டினாலே போதும்..... சிலீர் என்று ஒரு நீண்ட நீர் வெளியாய் கண்மாய் கண்களை நிறைக்கும்.

www.cleanindians.com



குளிர்ச்சியை அள்ளிப் பூசிக் கொண்டு காற்றும் திமிலோகமாய் வீசும். வற்றவே வற்றாத வீரபாண்டியன் கண்மாய் என்பது அதற்கு பெயர். இக்கரைக்கும் அக்கரைக்குமாய் ஒன்னரை மைல் நீளம்! கரை மேல் ஒத்தையடிப் பாதையோடு கூடிய - குறுமலை கணக்காய் கண்மாய்த் தடுப்பு. அந்த தடுப்பின் இருபுறங்களிலும் குண்டாங் குதிராக அரளி, எருக்கு, ஆவாரை, பிரண்டை, குப்பைமேனி என்று இயற்கையாய் பார்த்து வளர்க்கும் காட்டுப் பயிர்கள்!

காத்தாயி தன் பன்னிரண்டு ஆடுகளுடன் பனங்காட்டுக்குள் புகுந்திருந்தாள். பார்வை கீழே தரைப்பரப்பில் பனம் பழங்கள் கிடக்கிறதா என்று தேடியது. பனம் பழங்கள் தானாக விழுந்து கிடக்கும்.

அதைப் பொறுக்கி எடுத்து வந்து சருகுகளை பொறுக்கிப் போட்டு தீ வளர்த்து அந்த தீக்குள் பழங் களைப் போட்டு வாட்டி எடுத்து, பின் மட்டை உரித்து உள்ளே மஞ்சளாய் கிடக்கும் நார்ப்பொதி யைத் தின்பது என்பது ஒரு ருசியான அனுபவம்!

அவ்வளவும் பித்தம்...! ஆனால் அதைத் தின்றால் மலச்சிக்கலே இருக்காது. அதுமட்டுமல்ல - சிறுநீர் மஞ்சளாய்ப் பிரிந்து உடம்பும் கொஞ்சம் நிறம் கொள்ளும். சூடும் தணியும்.

இதெல்லாம் காத்தாயிக்கு தெரியாது. அவளுக்கு ருசிதான் கணக்கு. எனவே அங்கும் இங்குமாய்க் கிடந்த பனம் பழங்களை அவள் பொறுக்கிக் கொள்ளும் போது கண்மாய்க் கரைக் காற்று பட்டு பனை ஓலைகள் அநியாயத்துக்கு உரசிக் கொண் டன. அதுவே அந்த காட்டுக்குள் பல பேர் நடமாடு வதைப் போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி யிருந்தது.

இப்படிப்பட்ட காட்டுக்குள் வசிக்கும் நரிகள் 24 மணிநேரமும் இந்த உரசல்சப்தம் கேட்டபடியே இருப்பதால் தான் அவைகளுக்கு சப்த அதிர்வு களால் பயத்தை மூட்ட முடிவதில்லை.

அந்த காட்டில் சிலநரிகளும் இருக்கத் தான் செய்தன. ஒரு பெரிய செம்மண்மேட்டைக் குடைந்து கொண்டு உள்ளே படுத்த நிலையில் நுழைய முடிந்ததுபோல ஒரு இருப்பிடத்தையும் அவைகள் உருவாக்கிக் கொண்டிருந்தன. இரைக்கு

அவை வெளியில் வரும்போது ஆட்டுக்குட்டி களைப் பார்த்துவிட்டால் போதும் - அவைகளுக்கு ஒரே கொண்டாட்டமாகிவிடும். எனவே பனங் காட்டுக்குள் மட்டும் 'தா...ஸ்கு...ஏலேய்....' என்று குரல் கொடுத்தபடி இருப்பதிலேயே குட்டி ஆட்டை காத்தாயி தன் கைவசமே பிடித்துக் கொண்டிருப்பாள்.

அப்படி ஆட்டைப் பிடித்துக்கொண்டு கீழே கிடந்த பனம் பழங்களைப் பொறுக்கி தன் தாவணி முக்பில் போட்டுக்கொண்டு அவள் கண்மாய்க் கரை நோக்கி காலெடுத்த போதுதான் எப்பொழு தும் இல்லாதபடி அவள் காலடியில் ஏதோ குறுகுறுப்பதுபோல இருந்தது. யதார்த்தமாய் குனிந்து பார்த்தவளை அவள் பார்த்த காட்சி ஒரு மிரட்டு மிரட்டியது!

தரைப்பரப்பில் பூமிக்கு மேல் ஒரு கை தன் ஐந்து விரல்களையும் நெளித்து அசைத்தபடியிருந்தது!

பூமியில் இருந்து செடி கொடி முளைத்து பார்த்திருக்கிறாள். எங்காவது கை முளைக்குமா?

''வீவ்ல்ல்....!''

காத்தாயி அலறிய அலறல் கண்மாய்க் கரையை ஒட்டிக்கிடக்கும் கிராமமான பாண்டித்தேவன் பட்டிவரை நன்றாகவே எதிரொலித்தது!

## திக்...திக்... திக்! - 2

'இறப்பின் பிடிக்குள் சிக்கிவிட்டவர்களுக்கு, தங்களுக்கு மரணம் வந்துவிட்டது நன்றாகவே தெரியும். அவர்கள் உடம்பில் பாகம்பாகமாக உஷ்ணம் அடங்கி அப்படி ஒரு பாகம் இருப்பதே அவர்கள் வரையில் இல்லாமல் போகும்! அப்படி ஒரு நிலையில் மனது ஒன்றுதான் மிகவேகமாக இயங்கும். அப்படி ஒரு தருணத்தில் அவர்கள் பார்க்க விரும்புபவரை ஒருவேளை பார்க்க முடியாதபடி ஆகிவிட்டாலே கூட ஆபத்துதான்!

ஆம்... சம்பந்தப்பட்ட அதாவது பார்க்க விரும்பிய அந்த நபரைச் சுற்றியே அவர் ஆத்மா வட்டமிடுமாம்!'

தன் சைக்கிள் கடையில் பெரியசாமியின் சைக்கிளுக்கு பஞ்ச்சர் போட்டுக் கொண்டிருந்தான்

www.cleanindians.com



காத்தாயியின் அண்ணன் காளிமுத்து. அவன் காதிலும் அந்த 'வீல்' சப்தம் கேட்டு அடங்கியது. அவனுக்குள் வேறுவிதமான எண்ணங்கள்!

பனங்காட்டு உட் பொதி மறைவானது. சில விலைமாதர்கள் சமயங்களில் சில ஆடவர்களோடு அந்தப்பக்கமாய் ஒதுங்குவார்கள். அப்போது நடக்கக் கூடாததெல்லாமும் நடந்துவிடும்.

ஒரு சமயம் ஒரு முரடன் ஒரு விலை மாதின் கழுத்தையே நெரித்துக் கொல்ல முயல - அவள் போட்ட சப்தத்தில் பாண்டித்தேவன் பட்டியே நடுங்கிப்போனது. கூட்டமாய் ஓடிப்போய் பார்த்தபோது அவள் நார் நாராக பிய்ந்து கிடந்தாள். அவளை போட்டுத் தள்ளியவனை பார்க்க முடியவில்லை.

அதெல்லாம் காளிமுத்துவுக்குள் நினைவுக்கு வரவும், எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு பழைய சைக்கிள் ட்யூபை கயிறு போல கையில் எடுத் துக்கொண்டு பனங்காடு நோக்கித்தான் நடையிடத் தொடங்கினான். ஆனால் சிறிது தூரத்திலேயே ஆடுகள் அலறிக் கொண்டு முன்னால் ஓடிவர பின் னால் காத்தாயி ஓடி வருவதைப் பார்த்தவனுக்கு குபீரென்று கண்களில் தீப்பிடித்துக் கொண்டது.

ஓடிவந்த காத்தாயியும் திம்மென்று அண்ணன் காளிமுத்து மார்பு மேல் மோதி தரையிலும் சுருண்டு விழுந்தாள்.

''காத்தாயி.... காத்தாயி.... என்னபுள்ள? எதுக்கு ஓடிவர்றே....?''

''அண்ணே.... அண்ணே கையி!''

''கையா... என்னம்மா சொல்றே?''

''ஐயோ அண்ணே... பனங்காட்டுல ஒரு இடத்துல பூமிக்கு மேல கைமுளைச்சு அது என் காலை பிடிக்கப் பார்த்திச்சண்ணே...''

''அடங்கொப்புரானே... நெசமாவா?''

''ஆமாண்ணே.''

''அட என்னபுள்ள சொல்றே... எவனாவது புதருக்குள்ள பதுங்கியிருந்துகிட்டு நீ வரவும் உன் காலை பிடிச்சு இழுக்கப் பார்த்தானா?''

''இல்லண்ணே... இது பூமிக்கு மேல தெரிஞ்ச கையிண்ணே...''

''அட போ புள்ள... எதையோ பாத்துட்டு உளறுறே நீ''

காளிமுத்து சடைத்துக் கொண்டான். காத்தாயியும் அதற்கு மேல் எதுவும் பேசாமல் அவனை இழுத்துக் கொண்டு ஊருக்குள் செல்லத்தான் முயன்றாள்.

''என்னை எங்க இழுக்கறே?''

''வந்துடுண்ணே... நீ அந்த பக்கம் போகாதே...''

''அட போவே... பயந்த மூளி! பூமிக்கு மேல் கையாம்... இவகாலை புடிச்சு இழுக்க பார்த்திச்சாம். சரிதான். எந்த களவாணிப்பய ஒளிஞ்சிருந்து கலாட்டா பண்றான்னு... பாத்துட்டே வரேன். நீ ஆடுங்களோட வீட்டுக்குபோ...'' என்றான்.

அவள் ஆடுகளோ அவள் வீட்டை எப்பொழுதோ எட்டிவிட்டிருந்தன. காத்தாயி மட்டும் அவன் போவதை பயத்தோடு பார்த்தவளாக ''அண்ணே வேண்டாண்ணே... வேண்டாண்ணே...'' என்றே சொல்லியபடி அங்கு நின்றாள்.

சில தப்படி தூரத்திலேயே காளிமுத்துவின் உருவம் அவள் கண்களை விட்டு மறைந்து விட்டது. அந்த அளவு அந்த பனம் காட்டில் கீழே அங்கங்கே குட்டிப்பனைகள் கொழித்து வளர்ந்திருந்தன! காத்தாயி அங்கேயே நெடுநேரம் நின்று விட்டாள். காற்று வீச்சும், பனங்காட்டு சலசலப்பும் மட்டுமே அவள் காதுகளில்.....

கைகளில் தொரட்டி குச்சியோடு காத்தாயி நின்று கொண்டிருப்பதை யாராவது பார்த்தால் இளவயதில் ஒரு அவ்வையார் என்றுதான் சொல்வார்கள்!

காட்டுக்குள்போன காளிமுத்து நெடு நேரம் ஆகியும் திரும்பிடாத வருத்தத்தை முகத்தில் தேக்கிக் கொண்ட காத்தாயி ''அண்ணே... அண்ணே'' என்று பதில் குரல் கொடுத்துப் பார்த்தாள். ஆனால் அந்தக் காடு அவள் குரலை எதிரொலித்து திருப்பி அனுப்பி விட்டது.

உள்ளே ஏறிப்போய் அவனைத்தேடிப் பார்க்கவும் பயமாக இருந்தது. அதே சமயம் அவனுக்கு ஏதாவது ஆகிவிட்டதோ என்று கவலையாகவும் இருந்தது.

நெடுநேரம் நின்றவள் ஊருக்குள் போய் தன் அப்பனை கூட்டி வரும் எண்ணத்துடன் விறுவிறுவென்று நடை போட்டாள்.

அதே போல வீட்டுக்கு போய் பட்டிக்குள் அடைந்துவிட்ட தனது ஆடுகளையும் பார்த்து

www.cleanindians.com



முடித்தவளாக வெளியே கயிற்றுக் கட்டிலில் கிடந்த அப்பன் பொன்னையனை நோக்கித்தான் சென்றாள்.

பொன்னையன் குடித்துவிட்டு நல்ல போதையோடு கிடந்தான். அவனை எவ்வளவு உசுப்பியும் பிரயோஜனமில்லை. நல்ல வேளையாக அவள் முறைப்பையனும் மாமன் மகனுமான அருணாசலம் என்பவன் ஒரு சைக்கிளில் அங்கு வந்து சேர்ந்தான்.

''என்ன புள்ளே... ஏன் பதட்டமாயிருக்கே?''

''அது வந்து அருணாசலம்...''

''எதுவா இருந்தாலும் சும்மா சொல்லு காத்தாயி...''

''நான் என்னன்னு சொல்லுவேன்...? எதைன்னு சொல்லுவேன்...?''

''போதும் புள்ள... விஷயத்தை பட்டுன்னு சொல்லு''

அவளும் மூச்சு வாங்க அவ்வளவையும் சொல்லி முடித்தாள். அருணாசலம் முகத்தில் உடனேயே பூச்சி பறந்தது.

''ஆமா... இப்ப காளிமுத்து பனங்காட்டுக்குள்ள போயிருக்கானா?''

''ஆமாம்.. உள்ள இருந்து சத்தமே இல்ல..''

''சரி இரு.. நான் போய் பாத்துட்டு வர்றேன்.''

அருணாசலம் சைக்கிளை மிகவேகமாக மிதித்தான். பின் வீலுக்குள் எலிக்குஞ்சுகள் விளையாடுவதுபோல ஒருதினுசாய் கீச்சு வீச்சு சப்தம்!

சைக்கிளும் பாண்டிதேவன் பட்டியின் மேடு பள்ளங்களில் ஒரு ரக்கைமுளைத்த இரும்பு ரதம் கணக்காகப் பறந்து இறுதியாக பனக்காட்டுக் குள்ளும் புகுந்தது!

பனங்காட்டில் குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் போக முடியவில்லை. ஒரு இடத்தில் வண்டியை அப்படியே போட்டுவிட்டு 'காளிமுத்து... காளிமுத்து...' என்று நாலாபுறமும் துழாவியவனுக்கு 'பகீர்' என்றது.

காளிமுத்து ஒரு இடத்தில் ரத்தவிளாராகக் கிடந்தான். இரு நரிகள் அவன் உடம்பை ஆடையோடு கவ்வி இழுத்தபடி இருந்தன! அருணாசலத்துக்கு இதயம் அறுந்து வயிற்றுக்குள் விழுந்தது போல ஒரு அதிர்ச்சி!

# திக்...திக்... திக்! - 3

'உலகெங்கும் ஆவிகள் தொடர்பான திகில் மூட்டும் அனுபவங்கள் இன்றளவும் தொடர்ந்த படிதான் உள்ளன. சேர்வராயன் மலைப் பகுதியில் உள்ளடங்கிய நிலையில் நிறைய கிராமங்கள் உள்ளன. வாழவந்தி, செம்மனத்தம் என்றெல்லாம் அவைகளுக்கு பெயர்கள். இக்கிராமங்களைக் கடந்து அந்த மலைப் பகுதியில் ஒரு சாமிதோட்டம் உள்ளது. அத்தோட்டத்தில் குறிஞ்சிப்பூ பூக்கின்ற காலங்களில் எல்லாம் யாராவது நான்கு பேர் காணாமல் போய் விடுவார்கள். பிறகு சில நாட்கள் கழித்து அவர்கள் உடம்பின் பாகங்கள் அங்கங்கே கிடக்கும். இதை அந்த மலையில் சுற்றி வரும் துஷ்டதேவதை தான் செய்கிறது என்பதே அம்மலைவாசிகளின் கருத்தாகும்!'

**ப**னங்காட்டில் காளிமுத்துவை நரிகள் குதறிப் போட்ட நிலையில் பார்த்து விட்ட காத்தாயியின் மாமன் மகன் அருணாசலம் பின்னங்கால் பிடரியில் பட ஓடி வந்ததைப் பார்த்து காத்தாயி மட்டுமல்ல பாண்டித்தேவன்பட்டியே அரண்டு தான் போயிற்று.

அருணாசலத்திடமும் சட்டென்று வார்த்தைகள் வரவில்லை. பயத்தில் மிரண்டு போய் தண்ணீர்க் குட்டையில் விழுந்தவனைப் போல தெரிந்தான்.

காத்தாயியின் அப்பனான பொன்னையன் நல்ல போதையில் இருந்த போதிலும் அவனிடம் ஆச்சரியப்படும் விதத்தில் தெளிவும் இருந்தது.

''எலேய்... என்னாடா... பனங்காட்டுப் பக்கம் போய் பனங்காட்டு முனியைப் பார்த்தியாக்கும்?'' - என்று யாரும் கேட்காத ஒரு கோணத்தில் கேட்டான். ஊரே பொன்னையனைத் திரும்பிப் பார்த்தது. குறிப்பாக் அந்த கூட்டத்தில் இருந்த மருதுப்பிள்ளை பொன்னையனை அதிர்ச்சியுடன் பார்த்தார்.

''ஏ பொன்னையா... என்னவே சொல்றே? காட்டு முனி நடமாட ஆரம்பிச்சிருக்கா?''

''ஆமாம் பிள்ளை... பனங் கள் இறக்கலாம்னு

www.cleanindians.com



காட்டுப்பக்கம் போன நான் அது போட்ட அரட்டைல மிரண்டுல்ல ஓடி வந்தேன்...?''

- பொன்னையன் சொல்லவும் மருதுப்பிள்ளை தலையில் கை வைத்துக் கொண்டு ஓரமாய் போய் உட்கார்ந்துவிட காத்தாயி மட்டும் தன் அண்ணனைப் பற்றி ஞாபகமாகக் கேட்டாள்.

''அருணாசலம்... நீ மட்டும்தானே ஓடிவந்தே? என் அண்ணன் காளிமுத்தை பாக்கலியா?'' - அவள் கேள்விக்கு பதில் கூற முடியாமல் அருணாசலம் ஓங்கலாக அழத் தொடங்கினான்.

''எலே... சொல்லிட்டு அழுவுடா...''

''என்னத்த மாமா சொல்ல... காளிமுத்துவை அந்த முனி பலிவாங்கிடிச்சு மாமா. அவன் உடம்பை நரிங்க பிடுங்கிக் குதறிக்கிட்டிருக்கறத பார்த்துட்டுத்தான் நான் தலைதெறிக்க ஓடி வந்தேன்.''

- அருணாசலத்தின் பதில் காத்தாயி வரையில் சம்மட்டி அடி போல காதில் விழுந்தது. அப்படியே மயக்கமாகி கீழே விழுந்து விட்டாள்.

**பா**ண்டித்தேவன் பட்டியில் மொத்தம் பதினாறு சந்துகள். ஒன்றுக்கு கூட தார்ச்சாலை கிடையாது. பஞ்சாயத்து போர்டு தலைவர் பஞ்சவர்ணத்தின் வீடு இருக்கும் தெருவுக்கு மட்டும் சிமிண்ட் ரோடே போடப்பட்டிருந்தது. அந்த தெருவில் இருந்தே ஊருக்கு சேதி சொல்லத் தொடங்கி விட்டான் வப்பாளத்துக்காரன் வையாபுரி என்பவன். அவன் கையில் அனலில் வாட்டி முறுக்கேற்றப்பட்ட நிலையில் தப்பட்டை.

அதை லகுவாக தட்டிக் கொண்டே காலில் சலங்கை சப்திக்க அவன் தெருத் தெருவாகப் போனால் அந்த சப்தம் கேட்டே கூட்டம் கூடி விடும். கூட்டத்தில் அவனும் சொல்ல வேண்டியதை சொல்லுவான். இதுதான் ஊருக்கு சேதி சொல்லும் முறை.

அன்றும் சேதி சொல்ல புறப்பட்டான்.

முதல் செய்தியை பிரசிடெண்ட் பஞ்சவர்ணம் வீட்டு வாசலிலேயே ஆரம்பித்து விட்டான்.

''பாண்டித்தேவன்பட்டி மகாஜனங்களுக்கோர் செய்தி. இப்பவும் நம்ம ஊர் வடக்கு பக்கமா உள்ள 108 ஆம் பனங்காட்டுல 72 வருஷத்துக்கு முந்தி நம்ம

பாட்டன் பூட்டன்களால கட்டிப் போடப்பட்ட முனி கட்டவிழ்ந்து நடமாடத் தொடங்கிடிச்சு. அதோட பார்வை பட்டு நம்ம ஊர் பொன்னையன் மவனும் சைக்கிள் கடைக்காரனுமான காளிமுத்து உயிரே போயிருச்சு. ஆகையால தப்பித் தவறிக்கூட யாரும் நாத்திஎட்டாம் பனங்காட்டுப் பக்கம் போயிர வேண்டாம்னு பஞ்சாயத்தார் உத்தரவு.

அந்த முனியை திரும்பக் கட்டவும் அதோட நடமாட்டத்தை ஒடுக்கவும் மலையாள தேசம் பக்கம் போய் மந்திரவாதிங்களை கூட்டிக்கிட்டு வர்றது சம்மந்தமா இன்னிக்கு மந்தைத்திடல்ல பஞ்சாயத்தார் கூடி முடிவு எடுப்பாங்க. அந்த கூட்டத்துக்கு எல்லாரும் வரும்படி உத்தரஊஊஊ....''

- வப்பாளத்தான் செய்தியைக் கூறி முடித்து விட்டு கதர் சட்டையும் வேட்டியுமாய் நின்ற பிரசிடெண்ட் பஞ்சவர்ணத்தைப் பார்த்தான். அவரும் மேற்கொண்டு 'போ' என்பது போல கையை காட்டி முடித்தார்.

அவனும் தப்பட்டையை தட்டிக் கொண்டு கிளம்பி விட்டான்.

பிரசிடென்ட் பஞ்சவர்ணமும் பெருமூச்சுடன் தனது காரை வீட்டுக்குள் நுழைந்தார்.

ஊரிலேயே ஓரளவு வசதியான காரை வீடு அவர் வீடுதான். பெரும் கையும் கூட. நஞ்சையும் புஞ்சையுமாக நானூறு ஏக்கர் தேறும். நல்ல மனிதர் ஒரே மகள்! ரஞ்சிதம் என்கிற பெயருக்கு தோதாக ரஞ்சிதமாகத்தான் இருந்தாள். +2 வரை படித் திருக்கிறாள். கல்லூரிக்கு அனுப்புவதில் பஞ்சவர் ணத்துக்கு விருப்பமில்லை.

''பொட்டப் புள்ளிங்க ரொம்ப படிக்கக் கூடாது. அப்பால வேலைக்கு போறேன், காசு சம்பாதிக் கறேன்னு சொல்லுவாங்க. நாலு காசு கைல புழங்கத் தொடங்கிட்டா புருஷன்காரனை பெருசா நினைக்க மாட்டாங்க. 'உனக்கு நான் எதுலையும் குறைஞ்சவ இல்லை'ன்னு சரி ஞாயம் பேச ஆரம் பிச்சிடுவாங்க. இவங்களுக்கு நடுவுல இவங்க பெத்த புள்ளைங்க மாட்டிக்கிட்டு கஷ்டப்படும்.

பாத்துப் பாத்து வளக்கறது போய் எல்லாத்துக்கும் வேலைக்காரி வந்துடுவா. அவ வீட்டைக் கூட்டி குப்பையைத்தான் அள்ளுவா...

www.cleanindians.com



மனசைத் தொட அவளுக்கு தெரியுமா என்ன?

குடும்பமும் அழியறது தெரியாம அழிஞ்சிடும்.

அது அழியும் போது தெரியாது. அழிஞ்சு ஒன்னுமில்லாம போன பிறகுதான் தெரியும். அப்போ கைல காசு இருக்கும். ஆனா அதால எதுவும் பண்ண முடியாது.'' - என்று அவர் ஒரு பாட்டம் பேசுவதைக் கேட்டால் மிகவும் பழமைவாதி போல தோன்றும். அதைப்பற்றி எல்லாம் அவர் கவலைப்படுகிற ரகமும் இல்லை.

''நான் எனக்கு ஞாயம்னு பட்டதை பேசறேன். பொம்பளைக்கு ஊரும் புருசனும் அவன் மூலமா வந்த புள்ளைங்களும்தான் உலகம். அவங் களுக்காக கஷ்டப்படறதுதான் ஒரு ஆம்பளைக்கும் அழகு. அதனால அவன் வெளிய போய்ட்டு வரட்டும். இவ வீட்டை பாத்துக்கறதுதான் சரி. இவளால தான் வீட்டை நல்லவிதமா பார்த்துக் கவும் முடியும்.'' - என்று ஆணித்தரமாக பேசுவார். அதற்கு ஏற்ப தன் மகள் ரஞ்சிதத்தை தன் அக்காள் மகனுக்கே திருமண நிச்சயமும் செய்து விட்டார்.

அவரது அக்காள் மகன் ஞானசேகரன் மிலிட்டரியில் மேஜராக இருக்கிறான். ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மதுராவில் மிலிட்டரி கேம்ப்பில் அவனுக்கு பணி. திருமணத்துக்கு பிறகு ரஞ்சிதத்தை அங்கே கூட்டிக் கொண்டு போய் விடுவான். போன வாரம்கூட ரஞ்சிதத்தை பார்த்து பேசிவிட்டுப் போக மிலிட்டரி உடையிலேயே வந்திருந்தான். அவன் வந்த தோரணையே அசத்தலாக இருந்தது.

அப்படி வந்தவன் பாண்டித் தேவன்பட்டியே பார்க்க ரஞ்சிதத்தை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சுற்றி வந்தான். அப்போது அவன் பனங்காட்டுப் பக்கம் கூட போனான். மரத்தில் பழுத்து தொங்கியபடி இருந்த பனம்பழங்களை எல்லாம் தன் வசம் உள்ள பாதுகாப்புத் துப்பாக்கியாலே சுட்டு வீழ்த்தி அந்த பனம்பழங்களை விழச் செய்தது எல்லாம் இப்பொழுதும் ரஞ்சிதத்தின் கண்ணுக்குள்ளேயே இருக்கிறது.

அப்படிப்பட்டவள் வப்பாளத்தான் சொன்ன செய்தியால் அரண்டு போயிருந்தாள்.

''ஏன் தாயி... வாயப் பொளந்துட்டே?''

''வப்பாளத்தான் பனங்காட்டை பத்தி

சொல்லவும் பக்குன்னு ஆயிடிச்சிப்பா...''

''என்னத்தம்மா பண்ண... சங்கிலிக்கட்ட அவுத்துகிட்டு முனி மேய ஆரம்பிச்சிடிச்சே...''

''நெசமாவாப்பா...?''

''என்ன கண்ணு நீ... சைக்கிள்கடை காளிமுத்து உடம்பே பிஞ்சு போய் கொத்திப்போட்ட மாட்டுக்கறி மாதிரில்ல கிடைச்சிருக்கு.''

''முனிக்கு காளிமுத்து மேல ஏம்ப்பா இம்புட்டு கோபம்?''

''அப்படி இல்ல கண்ணு... அது துடியான சாமி! அது ஒட்டத்துல இருக்கைல யாரும் எதிர்ல வரக்கூடாது. வந்தா இப்படித்தான் ஆகும்.''

''சாமிங்கறே... பலிவாங்குமா?''

''அதான் சொன்னேன்ல துடியான சாமின்னு... அது, வரும் போது அப்படியே நெடுஞ்சாண் கிடையா கீழ விழுந்து 'முனியா காப்பாத்து'ன்னா விட்றும். இந்தப்பய யாரோ ரவுடிப் பயல பாக்கற மாதிரி பாத்துருப்பான். அதான் வெட்டி பொலி போட்டுடுச்சு.''

- அவர் சொன்னவிதமும் அதைக் கேட்டு ரஞ்சிதம் உடம்பு சிலிர்க்க பயந்த விதமும் மிக ரசமாக இருந்தது.

''சரி சரி நீ இதை எல்லாம் காதுல வாங்காம போய் உன் வேலையப் பார். கல்யாணமாகிப் போகப் போற பொண்ணு நீ. முனி நடமாட ஆரம்பிச்சுட்டதால வெளியவே வந்துடாதே. இன்னிக்கு அதை கட்றதை பத்தி எப்படியும் ஒரு நல்ல முடிவு எடுத்துருவோம்.''

- அவரும் ஒரு முற்றுப் புள்ளியோடு விலகிப் போனார். அவளுக்குள் அவர் வெளியே போகக் கூடாது என்று சொன்னது மட்டும் நிரடியது. வழக்கமாய் கண்மாய்க்கு போய் பெண்கள் படித்துறையில் நீந்திக் குளித்து விட்டு தாவணி முந்தானையிலேயே முடிந்தவரை அயிரை மீன் களைப் பிடித்து வந்து தன் தாயான செண்பகத் திடம் கொடுத்து குழம்பு வைக்க சொல்லுவாள்.

அப்புறமாய் ஐயாசாமி காட்டுக்குள் வெண்டை, கத்தரி என்று காய்கறிகளை தன் கைப்பட பறித்து வந்து சமைக்கவும் தருவாள்.

அதெல்லாமே சுகமான அனுபவங்கள்.

அப்படி அவள் போகுமிடமெல்லாமும் கூடவே

www.cleanindians.com



வருவாள் காத்தாயி.

இன்று அது அவ்வளவிற்கும் அவள் தந்தை 'தடா' போட்டுவிட்டது அவளைப் பெரிதாகவே கோபப்படுத்திற்று. இருந்தும் அடக்கிக் கொண்டாள்!

## திக்...திக்... திக்! - 4

'களத்தூர் என்ற ஊரில் ஒரு இறவைக் கிணறு இருக்கிறது. பார்ப்பதற்கு அது மல்லாக்க படுத்துக் கொண்டு ஆவென்று வாயைப் பிளந்து கொண்டு கிடப்பதுபோல தோன்றும். சாலையை ஒட்டிய அந்த கிணற்றுக்குள் ஒருநாள் தனியார் பஸ் ஒன்று பிரேக் பிடிக்காமல் தலைகுப்புற விழுந்தது. பஸ்சுக்குள் இருந்த 48 பேரும் அடுத்த பத்து நிமிஷத்துக்குள் உயிரை விட்டு அப்படியே பிணங்களாக ஒருவர் மேல் ஒருவர் கிடந்தனர். போலீசும், தீயணைப்பு வீரர்களும் பிணங்களை அள்ள முடியாமல் அள்ளிப் போட்டனர். அதன்பின் அந்த கிணற்றையும் பெரிய கம்பி வலை போட்டு மூடி விட்டார் அதன் சொந்தக்காரர்!

' ஆனாலும் இன்றும் அந்த கிணற்றருகே தெரியாமல் செல்பவர்கள் கூட்டமாய் சிலர் விசும்பி அழுவது போன்ற அழுகுரலைக் கேட்டுவிட்டு பயந்து போய் அங்கு இருந்து ஓடி விடுவதாக தகவல்!'

பொன்னையன் வீடு!

ஒரே திரண்டிருக்க ஒரு பாடையில் காளிமுத்துவின் உடல் ஒரு வெள்ளை வேட்டியில் ஐந்தடி நீளத்துக்கு மூடி கட்டப்பட்டிருந்தது. அந்த கட்டப்பட்ட வேட்டியும் கூட ரத்தம் உறைந்து போய் அதன் மேல் ஈக்கள் மொய்த்தபடி இருந்தன.

பொன்னையன் அப்படியே மல்லாந்து விட காத்தாயியிடம் தான் எல்லோரும் துக்கம் கேட்டுக் கொண்டிருந்தனர்.

''பொல்லாதமுனி உன் அண்ணனை இந்த பாடு படுத்திருச்சே...'' - என்று வந்தவர்கள் சொல்லி அழும் போது காத்தாயிக்குள் அதை நம்ப முடியாத

திணறல். 'பூமிக்குள் இருந்து ஒரு கரம் வெளிப்பட்டு காலைப் பிடிக்கப் பார்த்ததே அது எப்படி? - முனி இப்படி பூமிக்குள் இருந்தா வெளிப்படும்?' -அவள் அந்த துக்கத்துக்கு நடுவிலும் இப்படித்தான் கேள்விகளில் சிக்கியிருந்தாள்.

''போதும் பொன்னையா... சிதைபட்ட உடம்பு ரொம்ப கிடந்தா ஈ எறும்பு மொச்சி அப்பால ஊருக்கே சீக்கு வந்துடும் - தொட்டுத் தூக்குங் கப்பா. காட்லையும் கூடவே இருந்து கவனமா பாத்து எரிச்சிப்பிடணும். மிச்சம்மீதி விழுந்துடக் கூடாது...'' - என்று ஒரு பெருக சொல்லி முடிக்க, கோவிந்தா கோஷமுடன் காளிமுத்து உடம்பு தூக்கப்பட்டது.

காத்தாயி... 'அண்ணே' என்று ஓடிவந்து பாடைமுன் விழுந்து அரற்றியபடியே திரும்பவும் மயங்கிப் போனாள்!

மாலை நேரம்!

மந்தைத் திடல்...

பௌர்ணமி நாளில் எல்லா ஊர்களிலும் இருந்து மாடு கன்றுகள் அந்த திடலில் தான் விற்பனைக் காக கூடி நிற்கும். மற்ற நாட்களில் ஊர்ப் பொடியன்கள் 'கில்லி தாண்டில்' விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

அந்த திடலில் பாண்டித்தேவன்பட்டியே திரண்டிருந்தது. திடல் நடுவே ஒரு அரச மரம் நன்கு வளர்ந்திருக்க அதன் கீழ் பஞ்சாயத்தின் வட்டத் திண்ணை கருங்கற்கள் கொண்டு உருவாக்கப் பட்டிருந்தது.

அதில்தான் பிரசிடெண்ட் பஞ்சவர்ணம் அமர்ந் திருந்தார். அருகில் துணைத் தலைவர் சண்முகம். அதன்பின் பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள்.

- பகலில் தெருத் தெருவாக போய் சேதி சொன்ன வப்பாளந்தானும் ஒருபுறமாய் தீப்பந்தம் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான். எல்லோரும் வந்து விட்டார்களா என்று பஞ்சவர்ணமே ஒரு பார்வை பார்த்தார்.

''என்னப்பா ஆரம்பிக்கலாமா?'' - என்று சகாக்களையும் பார்த்து கேட்டார்.

''தாராளமா... அந்தி சாயறதுக்குள்ள முனி கோயிலுக்குப் போய் பலிவேற போடணுமில்ல...''



- என்றார் இன்னொருவர்.

அவர் சொன்னதற்கு ஏற்ப ஒரு எருமை, ஒரு காளை, ஒரு செம்மறி ஆடு, ஒரு வெள்ளைப் பன்றி, ஒரு சேவல் என்று பலி இனமே வரிசையாக ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

பஞ்சவர்ணமும் ஆரம்பித்தார்.

''எல்லாருக்கும் விஷயம் தெரிஞ்சிருக்கும். நம்ம ஊர் காவல் தெய்வமான நூத்தி எட்டாம் பனங்காட்டு முனி கட்டு அவுந்து போச்சு. அது கட்டவிழ்ந்து நடமாட ஆரம்பிச்சா என்னாகும்கறது இப்ப இருக்கறவங்களுக்கு தெரியாது. 72 வருஷத்துக்கு முந்தி அது ஊரை சுத்திச்சுத்தி வந்து வீட்டுக்கு ஒரு உயிரை பலி வாங்கினிச்சு.

அப்ப இருந்த நம்ம பாட்டன்மாருங்க முதல்ல பயத்தால தடுமாறுனாலும் பின்னால சுதாரிச்சு கேரளா பக்கம்போய் மலையாள மாந்திரீகருங்கள கூட்டிக்கிட்டு வந்து அந்த முனியை பெரும்பாடு பட்டு பக்கத்து மலைக்குகைல கட்டிப்போட்டு அதை கல்லைக்கொண்டு அடைச்சும்புட்டாங்க.

சமீபத்துல அந்த மலைக்குகைல விரிசல் விழுந்து அடைப்பெல்லாம் உடைஞ்சு போச்சு. அந்த பக்கமா மாடு மேய்க்கப் போன நம்ம ஊர் ஆளுங்க வந்து சொன்னப்போ நான் அதை பெருசா எடுத்துக்கலை. ஆனா அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பல்ல தெரியுது. இனியும் நான் எனக்கென்னன்னு இருந்தா அது ஊரையே சுடுகாடாக்கிப்பிடும். ஆகையால எல்லாரும் ஒண்ணுமண்ணா கூடி முனியை சாந்தப்படுத்தி அதை பழையபடி கட்டி மலைக்குகைல கொண்டு போய் சேப்போம். அதுக்கு ஆற செலவுக்கு வீட்டுக்கு நூத்திபதினோரு ரூவாயை வரியா விதிக்கறேன். நம்ம ஊர்ல மொத்தமா ஏழாயிரம் ஊடுங்க. கணக்கு போட்டுக்குங்க. கிட்டத்தட்ட ஏழு லட்சத்து சொச்சம் வரும். அவ்வளவுக்கும் முறையா கணக்கு வெச்சு முனி பூசை நடக்கும்.

உயிருக்கு ஆபத்தான விஷயம்!

இதுல யாரும் ஒதுக்கம் காட்டக்கூடாது.

ஒண்ணா இருந்து நாம இந்த சிக்கலை ஜெயிக்கணும்.''

- பஞ்சவர்ணம் பேசி முடித்தார். துணைத் தலைவர் சண்முகம், ''ஐயா பேச்சை நான்

www.cleanindians.com

அப்படியே வழிமொழியறேன்.'' - என்று கூற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தொடர்ந்து திரும்பவும் பஞ்சவர்ணமே பேசினார். ''உங்களுக்கெல்லாம் ஒரு விஷயம்... தப்பித்தவறிகூட விளக்கு வெச்ச பிறகு யாரும் வெளிய நடமாட வேண்டாம். அதே சமயம் சாமித் துன்னூறு எல்லார் நெத்தியிலையும் எப்பவும் இருக்கட்டும்.

வீட்டுக்கு வீடு மந்திரிச்ச எலுமிச்சம்பழத்தை நம்ம பஞ்சாயத்தே தரும். அதை வீட்டு முன்னால நிலைல கட்டித் தொங்க விட்றுங்க. முனி கட்டுப்பாட்டுக்கு வந்தது ருசுவாகி திரும்ப வப்பாளத்தான் வந்து தமுக்கு போட்றவரை யாரும் வெளிய வரக்கூடாது. இது ஊர்க்கட்டுப்பாடு...''

- என்று பேசி முடித்த பஞ்சவர்ணமும் கெடிகாரத்தை பார்த்தார். மணி மூன்றரை ஆகியிருந்தது. அங்கிருந்து அப்படியே ஊர் ஜனங்களோடு சேர்ந்து முனியப்பன் கோவிலுக்கு செல்ல முடிவாகி ஒரு ஊர்வலம் போல அந்த பயணமும் தொடங்கியது.

வப்பாளத்தான் தீப்பந்தமுடன் முதல் ஆளாக புறப்பட, அவன் பின்னாலே தப்பட்டையை தட்டிக் கொண்டு அவன் மகனே நடந்தான். அவனுக்கும் பின்னே ஊரிலேயே வயதான நல்லம நாயக்கர்... அவரைத் தொடர்ந்து பஞ்சவர்ணமும், பஞ்சாயத்து மெம்பர்களும் நடக்க அவர்களுக்கு பின்னாலே வரிசையாக எருமை முதல் வெண் பன்றி, சேவல் வரை நடை போட்டன.

ஊர் கண்மாய்க்கரை மேல் ஒரு சமயத்தில் ஒருவர்தான் நடக்கலாம். அதன்மேல் வரிசையாக ஒருவர் பின் ஒருவராக ஊரே நடந்து போன அந்த காட்சி அந்த ஊரை விட்டே எல்லோரும் வெளியேறிச் செல்லுகிற மாதிரி ஒரு தோற்றமளித்தது.

கண்மாய்க்கரைக்கு அந்த பக்கத்தில் ஊரின் தென்பகுதியில் அக்னி பாகத்தில் ஊர் மயானம் இருக்கிறது. அந்த மயானத்திற்கு போகும் வழியில் ஒரு ராட்சஸப் பாறையும் அந்த பாறையை ஒட்டி கடம்ப மரம் ஒன்றும் வளர்ந்திருக்க - அதற்கு கீழே தான் முனியசாமிக்கு சிலை இருந்தது.

கம்பீரமாக கையில் பட்டாக்கத்தியுடன் முட்டை விழிகளுடன் திரிசடை சகிதம்



முனியசாமி ஒரு கால் மடக்கி ஒரு கால் மேல் போட்டு அமர்ந்திருக்கும் தோரணையே ஆளை மிரட்டும்.

முன்னாலே பெரிதாக பலி பீடம். அந்தப்பலி பீடத்தை இரு பக்கமாய் இரு பூத கணங்கள் தாங்கிக் கொண்டிருப்பது போல செதுக்கப்பட்டிருந்தது. முனிசாமி மார்பின் மேல் பெருக்கல் குறிபோல குறுக்கு நெடுக்கமாய் கண்ணிச் சங்கிலிகள். அந்த சங்கிலிகளை அப்படியே பின்னால் உள்ள பாறை வரை கொண்டு சென்று பாறையில் கொண்டி வளையை போட்டு அதில் அந்த சங்கிலிகளை இழுத்துக் கட்டியிருந்தனர்.

பார்ப்பதற்கு முரட்டு கைதி ஒருவனை இழுத்துக் கட்டியிருப்பது போலவே இருந்தது. சாமி சன்னதிமுன் மரத்து நிழலின் கீழ் அமர்ந்திருந்த நிலையில் சாமிக்கு பெரிய அலரிப்பூ மாலை கட்டிக் கொண்டிருந்தார் பூசாரி பெரியண்ணன்.

தாரை தப்பட்டை சப்தம் கேட்டு எழுந்து பார்த்தார்.

ஊர் திரண்டு வந்து கொண்டிருந்தது.

அப்படியே திரும்பி சாமியை பார்த்தார்.

அந்தப் பார்வையில் 'என்ன சாமி நடக்குது ஊருக்குள்ளே?' என்கிற மாதிரி ஒரு கேள்வி. முனி கட்டவிழ்த்துக் கொண்டு போய் உயிர்பலி வாங்கி விட்டதாக சொல்லுவதை ஏனோ அவரால் நம்ப முடியவில்லை.

அவர் வரையில் உயிருக்கு ஆபத்தானவர்களை முனி காப்பாற்றி கை கொடுத்திருக்கிறது. பூசாரியையே ஒருமுறை காட்டுக்குள் கரடி துரத்திற்று. 'முனியப்பா...' என்று கத்திக் கொண்டே ஓடி வந்தார். அப்படி வந்தவர் ஒரு இடத்தில் மயங்கி விழுந்து விட்டார். அவர் கண் விழித்துப் பார்த்த போது அவருக்கு சில அடி தொலைவில் மார்பில் கத்தி பாய்ந்த நிலையில் கரடி இறந்து கிடந்தது. அருகில் மஞ்சள் குங்குமம் சிதறிக் கிடக்க குதிரையின் குளம்படித் தடயங்களும் தெரிந்தன. அப்போதே அவருக்கு முனிதான் வந்து காப்பாற்றியிருக்க வேண்டும் என்று தோன்றியது.

கோயிலுக்கு போய் பார்த்த போது அங்கே

www.cleanindians.com

சாமி கையில் உள்ள பட்டாக் கத்தியில் ரத்தத்திப்பிகள்; சாமி மேனி மேலும் அங்கங்கே கரடி முடிகள். அந்தக் கணமே நெடுஞ்சாண் கிடையாக ''முனியப்பா...'' என்று கீழே விழுந்து விட்டார்.

'அப்படி ஓடி வந்து காத்த தெய்வமா இன்று ஒரு பாவமும் அறியாத காளிமுத்துவை பலி வாங்கியிருக்கும்?' மனதில் குழப்பத்தோடு அவர் பார்த்துக் கொண்டே நிற்க - கூட்டமும் கோவிலை நெருங்கி விட்டது.

பூசாரியும் பிரசிடென்ட் பஞ்சாட்சரத்தை பார்த்து பெரிதாக கும்பிட்டார்.

''என்ன பெரியண்ணா ஊர் கூட்டத்துக்கு நீ வரலியா?''

''மன்னிக்கணும்யா... சாமியை விட்டுப்பிட்டு வர எனக்கு விருப்பமில்ல...''

''நீ சாமிய விட விரும்பலை. ஆனா சாமி நம்மை எல்லாம் விட்டுட்ட மாதிரிதான் எனக்கு படுது...''

''தப்பா எடுத்துக்காதீங்கய்யா... நம்ம சாமி காவல் காக்கற தெய்வங்க. அதுக்கு இப்படி பலிவாங்கத் தெரியாதுங்க...''

''அப்ப காளிமுத்துவை கண்ட துண்டமா வெட்டி பொலி போட்டது யாராம்?''

''அது எப்படிங்க எனக்குத் தெரியும்? நிச்சயம் சாமி இல்லே. அது மட்டும் எனக்கு உறுதியா தெரியும்...''

- பூசாரி பேச்சு பஞ்சவர்ணத்துக்குள் சற்று கனலை மூட்டியது.

''என்னய்யா... ஊரே சாந்தி பூசை பண்ண திரண்டு வந்திருக்கும் போது நீ வேற மாதிரி பேசறியே...''

''மனசுல பட்டதை சொல்றேங்க...''

''அப்ப சாமிக்கு சாந்தி பூசை பண்ண வேணாங்களா?''

''சாமிக்கு கோபம் வந்தால்ல சாந்தி பூசை பண்ண?''

''சரி... அப்ப நூத்தி எட்டாங் காட்டுக்குள்ள வேற எந்த சக்தி இப்படி செஞ்சிருக்கும்...?''

''பனங்காட்டுக்குள்ள காத்து கருப்புங்க அண்டலாம். அதுங்க சேட்டையா கூட



இருக்கலாம்.''

- பூசாரி பெரியண்ணன் கருத்தை நெற்றியில் வரிகள் விழுந்திட பஞ்சவர்ணமும் கேட்டுக் கொண்டார். ஊரே மௌனமாக வேடிக்கை பார்த்தது.

துணைத் தலைவர் சண்முகமும் தீவிரமாக யோசித்திருந்தவராக வாயைத் திறந்தார்.

''சரி பூசாரி... நீங்க சொல்றபடி நம்ம சாமி காவல் தெய்வம்னா இந்த சிக்கலை அதுவே தீர்த்து வைக்கட்டும். பனங்காட்டுக்குள்ற இருக்கற கெட்ட சக்தியை முதல்ல மலையாளத்து மந்திர வாதிங்கள கூட்டிக்கிட்டு வந்து என்னன்னு பார்ப்போம். பிறகு ஒரு முடிவுக்கு வரலாம்.'' - என்றார்.

இறுதியில் அன்றே அவரும் பூசாரியுமே கேரளம் புறப்பட்டு சென்று மந்திரவாதியோடு வருவது என்று தீர்மானமாயிற்று!

## திக்...திக்... திக்! - 5

'கன்னியாகுமரி பக்கமாக உள்ள கடல் வெளியில் ஒரு தீவு உள்ளது! இதில் அதிகபட்சம் ஒரு நூறு பேர் தங்கலாம். அவ்வளவுதான் அதன் நீள அகலம்! இதன் நடுவில் நிறையவே தென்னை மற்றும் பனை மரங்கள். தீவின் நடுவில் ஒரு திட்டு. அதை பார்ப்பதற்கு ஒரு இடிந்த சமாதி போலவே தெரியும். அந்த பக்கமாய் கப்பலில் வருபவர்களில் சிலர் விவரம் தெரியாமல் அந்த தீவில் ஒதுங்கினால் அவர்கள் கதையும் முடிந்து விடும்.

கரை ஒதுங்குபவர்கள் அந்த சமாதித் திட்டுப் பக்கம் என்னதான் இருக்கிறது என்று பார்க்கப் போனால் அவர்கள் கதையும் முடிந்து விடும். அங்கே போனவர்கள் திரும்பியதே இல்லை.

அங்கே ஒரு இரக்கமில்லாத கடல் பூதம் இருந்து கொண்டு தீவுக்குள் வருபவர்களை அதுவே கொன்று விட்டதாகவும், விடுவதாகவும் ஒரு நம்பிக்கை இன்றளவும் நிலவி வருகிறது'

இரவு நேரம்!

மொட்டை மாடியில் கொசுவலை கட்டிக்

www.cleanindians.com

கொண்டு காற்றாட கயிற்றுக் கட்டிலில் படுக்கும் பழக்கமுடைய பிரசிடெண்ட் பஞ்சவர்ணம் அன்று வீட்டுக்குள்ளேயே படுத்துவிட தீர்மானித்து விட்டார். பெரும்பாலும் ஊர் முழுக்க காற்றாட கயிற்றுக் கட்டில் போட்டு வெளியே தான் படுப்பார்கள்.

அன்றைய துயரச் சம்பவம் அவர்களை எல்லாமும் வீட்டுக்குள் அடக்கிப் போட்டு விட்டது. பஞ்சவர்ணமும் வீட்டுக்குள் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார். தனி அறை ஒன்றில் ரஞ்சிதம் படுத்திருந்தாள்.

அது அவளது அறை! அவளுக்கென்று தனியாக மர பீரோ, கண்ணாடி டேபிள், மேக்கப் சாதனங்கள். 'சுவர்ப் பிறையில் பழைய கதை புத்தகங்கள். அதில் பல புத்தகங்கள் ஊர் லைப்ரரியில் இருந்து எடுத்து வந்தவை. எல்லாமே காதல் கதைகள். அவற்றுக்கு நடுவே அவளை மணக்கப் போகும் ஞானசேகரனின் புகைப்படமும் இருந்தது. நினைத்த போதெல்லாம் அவன் புகைப்படத்தை எடுத்துப் பார்த்து ரசிப்பாள் ரஞ்சிதம். அன்றைய பயங்கரமான நாள் இரவில் அவன் புகைப்படம் தான் அவளுக்கு சற்று ஆறுதலாக இருக்கும் போல் தோன்றியது. எடுத்துப் பார்த்தாள்.

அழகாக முறுக்கிய மீசையும் தலையில் மிலிட்டரி தொப்பியுமாக படு விரைப்பாக இருந்தான் ஞானசேகரன். புகைப்படத்திலேயே தன்னைப் பார்க்கும் ரஞ்சிதத்தை பார்த்து கண்ணடிக்கவும் செய்தான். அந்த நொடியில் 'ரஞ்சிதம்' என்று நிஜமாலுமே அவன் குரல் அவள் காதுகளில் கேட்டதுதான் ஆச்சரியம். ஒருவித அதிர்வோடு திரும்பி நாலாபுறமும் பார்த்தாள். அமைதியான சூழல்!

அதில் அருகாமை ஜன்னல் மட்டும் 'சர்ரக்' என்று தனக்கேயுண்டான சப்தமுடன் தானாகத் திறக்கத் தொடங்கியது.

'கர்ச்...

கர்ச்...

கர்ச்...' - என்று அது மெல்ல மெல்ல திறக்கப்பட்டது போல நிற்க - ஜன்னலுக்கு அந்தப் பக்கமாய் நிழலாட்டமும் தெரிந்தது.

அவளுக்கு தெரிந்து விட்டது.

www.cleanindians.com



போன சந்திப்பில் கூட 'ரஞ்சிதம்..! நான் எப்ப வேணா வருவேன் - உன்னை பாக்கணும்னு தோணும் போதெல்லாம் நான் வந்துடுவேன்' என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

அந்த நொடியே அவள் உற்சாகமாகி விட்டாள்.

''ஞானம் மாமா...'' - என்றாள் மெல்லிய குரலில். பின் ஜன்னல் அருகே சென்றவள் எட்டிப் பார்த்தாள். அவனேதான்!

அன்று பார்த்த அதே மிலிட்டரி உடையோடு அவளையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

''மாமா...'' அவளிடம் குதூகலம் பீறிட்டது. கதவைத் திறந்து கொண்டு கொல்லை வழியாகப் போனால்தான் அவனை நெருங்க முடியும். ஹாலில் பஞ்சவர்ணம் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தார். செண்பகமும் அவருக்கு போட்டி போட்டுக் கொண்டு புரண்டு கொண்டிருந்தாள்.

ரஞ்சிதத்துக்கு அவனை உள்ளே அழைக்க ஆசையாக இருந்தது. அதே சமயம் இரவு நேரம் அவன் ரகசியமாக வந்திருப்பது யாருக்கும் தெரியாமல் தன்னை சந்திப்பதற்காக என்பதும் புரிந்தது.

அவனோ அவளையே வெறித்து பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

அந்தப் பார்வை - அவன் நிற்கும் விதம் எல்லாமே புதிது... அவளுக்கு ஆசையாகவும் இருந்தது - பயமாகவும் இருந்தது. அவன் இப்பொழுது சைகை காட்டத் தொடங்கினான். 'வா... வா... வா!' - அவனது வலது கை விரல்கள் சின்ன காகித தோரணமானது. மெல்லிசான காற்றில் அசைவது போல அசைந்து அவளை அழைத்த விதமே அலாதியாக இருந்தது.

ரஞ்சிதம் தர்ம சங்கடப்பட்டாள்.

அவளை வீட்டினுள் வரும்படி சைகை காட்டிப் பார்த்தாள். அவன், அவள் அழைப்பை உணர்ந்த மாதிரியே தெரியவில்லை. இறுதியில் அவள் ஒரு முடிவுக்கு வந்தவளாக மெல்ல பூனை போல நடந்து செல்ல காலெடுத்தாள். அவளது வெள்ளிக் கொலுசின் மணிகள் சப்தமிட்டன. அந்த சப்தம் ஹாலில் படுத்திருக்கும் அவள் தாய் செண்பகம் காதிலும் விழுந்திருக்க வேண்டும்.

''ரஞ்சிதம்... இன்னுமா நீ தூங்கலை?'' - என்று

படுத்த நிலையிலேயே கேட்டாள். கொஞ்சம் சுருக்கென்றது. கையை உதறிக் கொண்டாள். அவனோ அந்த இடத்தை விட்டு அசையாமல் அங்கேயே நின்று கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அவனுக்கு சைகை பாஷை மூலம் உள்ளே எல்லோரும் முழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிப் பார்த்தாள். அவன் பதிலுக்கு கோபமாக முறைக்கிற மாதிரி இருந்தது.

பஞ்சாயத்து போர்டு ஆபீசில் இரவு 11 மணிக்கு சங்கு பிடிக்கும் வழக்கம் அப்போதும் நடைமுறையில் இருந்ததால் அந்த சங்கு அலறும் சப்தம் கேட்டது. அது அடங்கிய நொடி ஜன்னல் வழியே திரும்பப் பார்த்தாள். அவனைக் காணவில்லை.

'ஒருவேளை போய் விட்டானோ?'

வருத்தமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

திரும்பி வந்து படுக்கையில் விழுந்தாள். வடநாட்டில் மிலிட்டரி கேம்ப்பில் இருக்க வேண்டியவன் ஊருக்கே போகாமல் இங்கே வந்தது கூட அதிசயமில்லை. அப்படி ஆசையோடு வந்தால்தான் அவன் நல்ல ஆசையுள்ள மாப்பிள்ளை. ஆனால் வீட்டிற்குள் வராமல் அவன் வெளியேயே நின்று விட்டதுதான் அவளுக்குள் விளங்காத புதிராக நெளிசல் எடுத்தது.

தாவணி முந்தியில் முடிச்சு போட்டு போட்டு அவிழ்த்த போது கதவு திறக்கப்படுவது போல ஒரு சப்தம். வெடுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள். அவன் கதவருகே நின்று கொண்டிருந்தான்.

ஒரு க்ஷணம் ரஞ்சிதத்துக்கு நெஞ்சையடைத்தது. அவனோ உதட்டின்மேல் கையை வைத்து 'சப்த மிடாதே' என்று சைகைகாட்டினான். அது அவளை யும் கட்டிப் போட்டது. அப்படியே அவன் மீண்டும் அவளிடம் என் பின்னால் வா என்று அழைத்தான். அழைத்ததோடு அல்லாதபடி ஹாலுக்குள் அவள் அப்பா அம்மா நடுவே மெதுவாக நடந்து செல்ல வும் செய்தான். அவன் நடப்பதை அவர்களும் உணர்ந்த மாதிரி தெரியவில்லை. அதுவே ரஞ்சிதத்துக்கும் தைரியமளித்தது.

அவளும் மெல்ல நடக்க ஆரம்பித்தாள். கொலுசு சப்தமிடாதபடி பைய பைய அடிகளை எடுத்து



வைத்தாள்.

வாசல் கதவு திறந்தே இருந்தது.

அவனும் நடுத்தெருவில் இறங்கி விட்டிருந்தான்.

அவள் வரவும் வடக்கு பக்கமாய் நடக்கத் தொடங்கினான்.

''மாமா நில்லுங்க... இது என்ன விளையாட்டு? ஊர்ல இருந்து எப்ப வந்தீங்க?''

அவள் கேள்விக்கு அவன் பதிலே கூறவில்லை. தொடர்ந்து நடந்தான்.

''ஐயோ உங்களத் தான்... இப்ப நாம எங்க போறோம்? யாராவது பாத்துட்டா ஆபத்து...''

அவன் உடனேயே திரும்பி அவளைப் பார்த்து முதல் முறையாக சிரித்தான்.

''இது என்ன சிரிப்பு... நடுராத்திரில?''

''ஏன் ரஞ்சிதம்... ரொம்ப பயப்பட்டியா?''

''அப்பா... வாயைத் திறந்திட்டீங்களா... ஆமா இது என்ன மாமா நடுராத்திரில ரகசியமா திருடன் மாதிரி வந்துகிட்டு அப்பா அம்மாவைக் கூட நீங்க பாக்காம என்னை எங்க கூட்டிக்கிட்டு போறீங்க...?''

''உம்... காதல் சரஸம் பண்றவன் அப்பா அம்மாவையா கூப்பிடுவான்...''

''ஆமா... இது என்ன கூத்து... அதான் கல்யாணம் நடக்கப் போகுதுல்ல... அதுக்குள்ள என்ன அவசரம்?''

அந்த நள்ளிரவில் நடுரோட்டில் அவர்கள் பேசிக் கொண்ட போதிலும் கேட்க யாரும் இல்லை. வழக்கமாக லாந்தர் விளக்குடன் ஊர்க்காவல்காரன் மணித்தேவன் என்பவன் சுற்றி வருவான். இன்று அவனும் கூட முனிக்கு பயந்து கொண்டு வரவில்லை.

''சரி ரஞ்சிதம்... வா என்கூட!''

''இந்த ராத்திரில எங்க மாமா?''

''அமைதியான ஒரு இடத்துக்கு...''

''ஐயோ மாமா... இன்னிக்கு ஊரே அமைதியாத்தான் இருக்கு. பார்த்தீங்கல்ல...''

''உம்!''

''நம்ம ஊர் காவல் தெய்வம் முனி கட்ட அவிழ்த்துகிட்டு ஊரை சுத்திக்கிட்டு இருக்காம்...''

அதைக் கேட்டு அவன் சிரித்தான்.

''தெரியும்... நீங்க சிரிப்பீங்கன்னு எனக்கும்

www.cleanindians.com

நல்லா தெரியும். நீங்கதான் பெரிய மிலிட்டரிகாரர் ஆச்சே. அதுலையும் மிலிட்டரில மேஜர் வேற...''

''சரி சரி என்கூட வா...''

''என்ன மாமா இவ்வளவு சொல்றேன் கேக்காம.... நான் வரேன் - யாராவது பாத்துடப் போறாங்க...''

''நான் இருக்கும் போது யார் பார்த்தா என்ன ரஞ்சிதம்...''

''அது சரி... முதல்ல நீங்க தைரியமா வீட்டுக்கு வாங்க. வீட்லையும் தனியா ரூமெல்லாம் இருக்கு. அப்புறம் மொட்ட மாடி இருக்கு. அங்க ரகசியமா எவ்வளவு வேணும்னா பேசிக்கலாம். முதல்ல வீட்டுக்கு வாங்க. நான் இவ்வளவு தூரம் வந்ததே ஜாஸ்தி.''

- ரஞ்சிதம் வேகமான பதிலோடு திரும்பி நடக்கத் தொடங்கி விட்டாள்.

அவனுக்கு மிகவும் ஏமாற்றமாகி விட்டது.

வீட்டுக்குள் பூனை போல நுழைந்தவள் வெளியே போனதே தெரியாதபடி அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

அப்படியே ஜன்னல் பக்கம் வந்து ஜன்னல் கதவை அடைக்கலாம் என்று நினைத்த போது திரும்பவும் அவன் ஜன்னலுக்கு அப்பால் பழையபடியே வந்து நின்று கொண்டு அவள் பார்க்கவும் கையை அசைத்தான்.

அவளுக்கு கோபமாக வந்தது. ஜன்னல் கதவை அழுத்தி மூடிவிட்டு வந்து படுக்கையில் விழுந்தாள்.

ஒரு பக்கம் கோபம் வந்தாலும் இன்னொரு பக்கம் அவனது அன்பும் ஆசையும் அவளுக்கு உற்சாகத்தை தந்தது. 'கடவுளே! இந்த அன்பும் ஆசையும் சாகும் வரை தொடர வேண்டும்' என்று அப்படியே கண்களை மூடி வேண்டிக் கொண்டாள்.

அப்படியே கண்ணயர்ந்து விட்டாள்!

நெடுநேரம் கழித்து புரண்டு படுத்த போது விழிப்பு ஏற்பட்டது. அதே சமயம் ஹாலில் உள்ள பெண்டுல கெடிகாரம் மணி மூன்று என்பதற்கு தோதாக சப்தமும் போட்டது.

'ஓ... மணி மூன்று...!' - அவளுக்குள் ஒரு சிறு அதிர்வு. அவள் சாத்தியிருந்த ஜன்னலும் திறந்து இருந்தது.



அந்த க்ஷணம் அவள் பின்னங் கழுத்தில் ஒரு குறுகுறுப்பு. மெல்ல எழுந்து சென்று வெளியே பார்த்தாள். ஞானசேகரன் முன்பு நின்று கொண்டிருந்த அதே இடத்தில் அப்படியே நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். முன்பைவிட அந்த பார்வையில் இப்பொழுது கோபம் நன்கு தெரிந்தது.

ரஞ்சிதத்துக்கு நிஜமாலுமே நெஞ்சைப் பிசைந்தது.

'இது என்ன பைத்தியக்காரத்தனம்' என்று கேட்கத் துடித்தது அவள் நாக்கு. அதேசமயம் தெருவில் கூட்டுறவு சங்க பால் வேன் வரும் சப்தம் கேட்டது. அதன் டிரைவர் ஹாரன் கொடுத்துக் கொண்டே வருவான்: பெரும்பாலோர் அந்த சப்தத்துக்கே விழித்துக் கொண்டு விடுவார்கள். ரஞ்சிதத்தின் கவனமும் திரும்பியது. பஞ்சவர்ண மும் அந்த சப்தம் கேட்டு எழுந்து கொண்டார்.

அப்பா எழுந்து கொண்டது தெரிந்து ஓடிவந்து ரஞ்சிதம் தன் படுக்கையில் விழுந்தாள்.

மனது கிடந்து துடித்தது.

எப்படியும் அவர் முகம் கழுவ அவன் நின்று கொண்டிருக்கும் இடத்தின் வழியாகத்தான் கொல்லைக்கு போவார். அப்போது அவர் அவனைப் பார்க்கக் கூடும் என்று கருதி போர்வையை இழுத்து மூடிக் கொண்டாள்.

அவரும் அந்த பக்கமெல்லாம் செல்லும் சப்தம் கேட்டது. ஆனால் ஞானசேகரனை அவர் உணர்ந்த மாதிரியே தெரியவில்லை. ஆச்சரியமாகி விட்டது ரஞ்சிதத்துக்கும்... போர்வையை விலக்கிக் கொண்டு திரும்பவும் எழுந்தாள். ஜன்னல் அருகே வந்து பார்த்தாள்.

அவனைக் காணவில்லை!

'அப்பா வரவும் அவன் அகன்று கொண்டானா... இல்லை...' அவளுக்குள் குழப்பம். மெல்ல நடந்து ஹால் பக்கம் வந்தாள். அவள் தாயும் விழித்துக் கொண்டிருந்தாள். அப்படியே கூந்தலை அவிழ்த்து முடிச்சு போட்டு கட்டத் தொடங்கியவள் ரஞ்சிதத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

''அட என்ன கண்ணு இது... விடிஞ்சு எட்டு மணி வரை இழுத்து போத்திக்கிட்டு தூங்கற நீயா இன்னிக்கு மூணு மணிக்கே

www.cleanindians.com

முழிச்சுக்கிட்டே?''

அம்மாவின் கேள்வி முன் சற்று அசடு வழிந்தாள்.

''என்னன்னே தெரியல... ராத்திரியெல்லாம் யாரோ ஊட்டை சுத்தி நடமாட்ற மாதிரியே இருந்துச்சு.'' - என்றபடியே அலுப்புக் கொட்டாவி விட்டாள். அந்த நொடியே ''அம்மா மாமா தான் வந்திருந்தார்'' என்று சொல்ல ரஞ்சிதத்துக்கும் வார்த்தைகள் வந்து விட்டன. இனம்புரியாத ஒரு உணர்வு தடுத்து நிறுத்தியது. அவளும் வெளியேறி அவன் நின்று கொண்டிருந்த இடம் நோக்கி சென்றாள். கொல்லையில் விளக்கைப் போட்டுக் கொண்டு பஞ்சவர்ணம் வாய் கொப்பளித்துக் கொண்டிருந்தார். ஞானசேகரன் வந்த சுவடே தெரியவில்லை.

ரஞ்சிதத்துக்கு மிரட்சியாகக்கூட இருந்தது. நேராக மாப்பிள்ளை மிடுக்கோடு வீட்டிற்கு வர வேண்டிய ஞானசேகரன் எதனால் ஒரு திருடன் போல இப்படி நடந்து கொள்கிறான் என்பதும் விளங்கவேயில்லை.

அவள் வரையில் அன்றைய காலைப் பொழுது குழப்பமுடன் தொடங்கி விட்டது!

வெளியே தெருப்பக்கமும் வந்து வாசல் தெளிப்பது போல நாலாபுறமும் பார்த்தாள். அவனைக் காணவில்லை! எங்கே போயிருப்பான்?

## திக்...திக்... திக்! - 6

'இது ஒரு நெடுஞ்சாலை அனுபவம்!

லோகநாதன் ஒரு லாரி டிரைவர். கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை லாரி ஓட்டியிருப்பவர். லாரியில் இரவு நேரங்களில் பயணிக்கும் போது எங்கே லாரியை நிறுத்தி இளைப்பார வேண்டும், எங்கே லாரியை நிறுத்தாமல் செலுத்த வேண்டும் என்பதை ஒரு பாடமாகவே கற்று வைத்திருப்பவர்.

தேசிய நெடுஞ்சாலைகளில் நிறையவே விபத்துக்கள் நடைபெறுவதுண்டு. அதில் கொத்துக் கொத்தாக இறந்தவர்களும் அதிகம். அப்படி ஒரு முடிவு ஏற்பட்டு இறந்தாக வேண்டும்

www.cleanindians.com



என்கிற பலருக்கு நடுவில், ஆவியாக அலைந்து திரிய வேண்டும் என்கிற விதிப்பாடு உடைய சிலரும் உண்டு.

தர்மபுரியைக் கடந்து பெங்களூர் செல்லும் போதெல்லாம் தன் லாரிக்கு முன்னால் வெள்ளைச்சீலை கட்டிய ஒரு இளம்பெண் நடந்து செல்வதை லோகநாதன் பார்த்திருக்கிறார். அவளும் நடு ரோடில் நின்று லாரியை மறிப்பாள். லிஃப்ட் கேட்பாள். முடியாது என்றால் அழுவாள். அவரும் பலமுறை வேறு வழியின்றி அவளுக்கு லிஃப்ட் கொடுத்திருக்கிறார். அப்போதெல்லாம் 'நீ யார்? இந்த நடுராத்திரியில் எங்கே போகிறாய்?' என்று கேட்டால் பதிலுக்கு முறைப்பாள். மேற்கொண்டு எதுவும் பேசமாட்டாள்.

ஒரு பகல் பொழுதில் அதே சாலை வழி வரும் போது சாலை ஓரமாக ஒரு தோப்பை ஒட்டி லாரியை நிறுத்தி விட்டு இளைப்பாறினார். அப்படியே தாகத்துக்கு தண்ணீர் கேட்டு தோப்பு வீட்டை அவர் அணுகிய போது அங்கே வாசல்படி அருகிலேயே அந்த பெண்ணின் படத்துக்கு மாலை போடப்பட்டிருந்தது.

பிறகுதான் தெரிந்தது தான் பல இரவுகள் லிஃப்ட் கொடுத்தது அந்த பெண்ணின் ஆத்மாவிற்கு என்று!'

காத்தாயி அன்று ஆடுகளை மேய்த்துக் கொண்டு காட்டுப் பக்கம் போகவில்லை. அவளுக்குள் அண்ணன் சாவு ஒரு இடியாக இறங்கியிருந்தது. பொன்னையன் சாதாரணமாகவே மொடாக்குடியன். இப்பொழுது மகன் போய் விட்ட துக்கத்தை நன்றாகவே கொண்டாடினான். ஒரு ஓரமாக சுருண்டு விழுந்து கிடந்தான்.

இப்படியே எவ்வளவு நேரம்தான் கிடப்பது?

முதல் நாள் காளிமுத்துவை காட்டுக்கு தூக்கிப் போனவர்கள் இரண்டாம் நாள் சாங்கியத்துக்கு வந்து நின்றனர். ஒரு மண் கலயத்தில் பாலும், இன்னொரு கலயத்தில் வெறும் நீரையும் வைத்து அதை ஒரு கூடையில் வைத்து எடுத்துச் செல்ல வேண்டும்.

எரிந்த சிதை மேடையில் பாலை தெளித்து விட்டு அவிந்து கிடக்கும் எலும்புகளை தண்ணீர்

உள்ள பானையில் போட்டு எடுத்துக் கொண்டு போய் கண்மாயின் ஒரு மூலையில் அஸ்தி கரைப்பதற்கென்றே ஒரு இடம் உள்ளது. அங்கே போய் கரைத்து விட்டால் காரியம் முடிந்தது.

அதற்காக வந்து நிற்பவர்களை காத்தாயி கண்ணீரோடு பார்த்தாள். கூடை கலயங்களை தயாராக எடுத்து வைத்திருந்தாள். அவர்களில் அவள் மாமன் மகன் அருணாசலமும் இருந்தான். அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். அவன் கண்ணிரண்டும் வறண்டு போய் குழிக்குள் கிடக்கும் கறுப்பு குண்டுகளைப் போல காட்சி தந்தது. அதுவே அவன் மிகவும் துக்கப்பட்டிருக்கிறான் என்பதை காட்டிக் கொடுத்தது.

''காத்தாயி... நீ இரு. நான் போய் பாலு ஊத்திட்டு எலும்பையும் சாம்பலையும் கம்மாய்ல கரைச்சிட்டு வந்துட்றேன்...'' - என்று காற்று போன ஈனக் குரலில் சொல்லியபடி அவர்களோடு கிளம்பினான்.

சேகண்டி அடிப்பவன் மணி அடித்துக் கொண்டு சங்கு முழங்கியபடி முன்னால் செல்ல அவர்கள் நான்கு பேர் மட்டும் பின் தொடர்ந்தனர்.

மணி அடிக்கும் சப்தம் கேட்டு அங்கங்கே வீடுகளில் இருந்து சிலர் எட்டி வெளியே பார்த்தனர்.

அந்த வீதியில் தான் இருந்தது சுப்பையா நாடாரின் மளிகைக்கடை. கடையை நாடாரும் திறந்து கொண்டிருந்தார். சரியாக கடை திறக்கும் போது பால் கலயத்தோடு அருணாசலம் கடந்து போகவும் ''ச்சே... கடை திறக்கற நேரமே சரியில்லாம இருக்கே...'' - என்று முனங்கினார். அவர் முனங்கவும் உள்ளிருந்தபடி அவர் மகள் மல்லிகா வேகமாக வெளியே வந்து எட்டிப் பார்க்கவும் சரியாக இருந்தது. அவள் முகத்திலும் லேசான பீதி!

அருணாசலம் அவளிடம் கண்ணாலேயே ஏதோ பேசினான். இருவருக்கும் சம வயது. ஒன்பதாம் வகுப்பு வரை ஒரே வகுப்பில் படித்தவர்கள் வேறு!

மல்லிகா நல்ல வெளுப்பு. உடம்பில் எல்லா அவயவங்களும் அளவுக்கு விஞ்சியே வளர்ந்திருந்ததால் எந்த ஆண் மகனும் அவளை ஒருமுறை பார்த்தால் சட்டென்று பார்வையை எடுத்துவிட மாட்டான்.

www.cleanindians.com



மயானத்துக்கு நடக்கின்றவர்களில் மணி அடிப்பவன் கூட மல்லிகாவை ஒரு கள்ளப் பார்வை பார்த்தான். சுப்பையா நாடாருக்கு மானம் என்றால் உயிர். அவரும் ஒரு ஆணாக இருப்பதால் ஆண் வர்க்கத்தின் வக்ரங்கள் பற்றி நன்கு அறிந்தவர். எனவே எட்டிப் பார்த்த மல்லிகாவை பார்வையாலேயே ''உள்ள போ புள்ள...'' - என்றார். அவளும் உள்ளே ஓடி விட்டாள்.

மயானம்!

காளிமுத்துவின் சடலம் நன்கு வெந்து அவிந்து அடங்கியிருந்தது. நின்று ஒரு பெருமூச்சுடன் பார்த்து விட்டு அருணாசலம் பால் கலயத்தை வெளியே எடுத்தான்.

''ஞாயமா அப்பன்காரன்தான் வந்து தெளிக்கணும். மாமன் மவன் நீ பால் தெளிக்க வேண்டியிருக்கு பார்...'' என்றார் ஒரு உறவுக்காரர்.

''நெசத்துல நான் தெளிச்சாதான் மாமா, காளிக்கு சந்தோசம். இப்ப அவன் ஆவி இங்க இருந்துச்சுன்னா அது நான் தெளிச்சதைப் பார்த்து சந்தோசம் தான் படும்'' - என்று அவன் கூறவும் பக்கத்து ஒத்தைப் பனைமரம் ஒன்றின் தலை பாகத்தில் இருந்து ஒரு காய்ந்த மட்டை விழவும் சரியாக இருந்தது.

''சரி... சரி... சாம்பல அள்ளு - கிளம்புவோம்.'' - என்றார் ஒரு வயதானவர். அதேபோல சாம்பல் படுகையில் கையை விட்டு எலும்புத் துண்டுகளையும் சாம்பலையும் அள்ளி தண்ணீர் கொண்டு வந்த கலயத்தில் எடுத்து எடுத்து போட்டான்.

அப்போது மயானக் குடிசைக்குள் இருந்து புலையன் வெளிப்பட்டு வந்து கொண்டிருந்தான். வயதான புலையன். 'முக்கி' என்பது அவன் பெயர். மூன்று ஊர் மயானத்துக்கும் ஒருவன்தான். ஊருக்குள் அவன் வந்து செல்ல இந்த நாளிலும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

சிவராத்திரி ஒரு நாளில் மட்டும் அவன் எங்கு வேண்டுமானாலும் வந்து போகலாம். அன்று வீடு வீடாக வந்து வரி கேட்பான். ஐந்தோ, பத்தோ கொடுப்பார்கள். மற்ற நாளில் பிணம் விழுந்தால் தான் அவனுக்கு வரும்படி.

''வாடா முக்கி.'' என்று உரிமையோடு அழைத்தார் ஒரு கிழவர். அவனும் வந்து கும்பிட்டான். பின் அஸ்திக் கலசத்தை பார்த்தபடியே பெருமூச்சு விட்டான்.

''என்ன முக்கி பெருமூச்சு விட்றே?''

''விடாம என்னத்த பண்ண... நேத்து இந்த பொணத்தை எரிக்க நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்.''

''ஏன்... விறகு தீர்ந்து போச்சா...?''

''இல்லய்யா.., ஒரு ஆவிக் கை சுத்திச் சுத்தி வந்துச்சு. என் கைல இருந்த கோலை எத்தினி வட்டம் புடுங்கிப் போச்சு தெரியுமா...''

''ஆவிக் கையா... என்னடா சொல்றே?''

''உள்ளதைத்தான்... அல்பாய்சுல .போன பொணத்தோட ஆவி சுத்தி வரும்னு எனக்கும் தெரியும். அந்த வகைல காளிமுத்து ஆவிதான் சுத்தி வருதாக்கும்னு முதல்ல நினைச்சேன். போய் மந்திரிச்ச கயித்தை கைல கட்டிக்கிட்டேன். அப்படியும் விடலை. அதுல இருந்து அது வேற ஒரு சக்தின்னு தெரிஞ்சிச்சு...''

''என்னடா முக்கி சொல்றே... காளிமுத்து முனி அடிச்சு செத்த பய... அந்த முனிதான் சுடுகாட்டுக்குள்ளேயும் வந்துடுச்சா?''

''முனி என் குலசாமி ஆச்சே... அடுத்து அது எதுக்கு எரியற பொணத்தை சுத்தி வரணும். இது ஏதோ ஆவேசம் புடிச்ச ஆவி...''

''ஆவியா... அப்படி யார் அது?''

''தெரியாது... மலையாளத்துக்காரவுக வந்தா இந்த சங்கதியை சொல்லுங்க. அவங்க கண்டுபிடிச்சிருவாங்க...''

''அவசியம் சொல்றேன்... நீயும் என்னென்னவோ சொல்றே...''

''உள்ளதைத்தான்யா சொன்னேன். குடிசைல என்னை படுக்க உடலை தெரியுமா? சுத்திச்சுத்தி வந்திச்சு...''

புலையன் முக்கி சொன்ன தகவல் அருணாசலம் முகத்தில் கரி பூசியது போல இருளச் செய்து விட்டது. மௌனமாக எதுவும் பேசாமல் அஸ்தி கலசமுடன் அங்கிருந்து நடந்தான்.

அவர்கள் அவ்வளவு பேரும் நேராக கண்மாய்க்குத்தான் சென்றனர். அஸ்தி

www.cleanindians.com



கரைப்பதற்கென்றே ஒரு படித்துறை உள்ளது. அங்கே ஊரில் யாரும் இறங்கி குளிக்க மாட்டார்கள். படித்துறை முழுக்க உடைந்த சட்டிகளும், காய்ந்த மாலைகளும், மூங்கில் கூடைகளும் கிடைக்கும். இவர்களும் அங்கேதான் சென்றனர்.

அருணாசலம் அஸ்தியை எடுத்து வரும் போது கூட சற்று பேசினான். இப்போது அவனிடம் சுத்தமாக பேச்சே இல்லை. இறுகி விட்டிருந்தான்.

படித்துறையை நெருங்கியவன் கலசத்தை மார்புக்கு முன் பிடித்தபடி தண்ணீரில் இறங்கி இடுப்பளவு நீரில் நின்றான். அவனுக்கு அருகில் அவன் உறவுகள் - அதுவும் எண்ணி மூன்று பேர். அவர்களில் ஒருவருக்கு திடீரென்று சாமி வந்தது போல ஆவேசம். கண்களிரண்டும் வெறிக்க நாக்கை துருத்திக் கொண்டு ஆவேசமாக அருணாசலத்தை பார்த்தார். அதை மற்ற இருவரும்கூட ஒருவித அதிசயமாகப் பார்த்திட-

''டேய்... எங்கேடா வந்தே?'' - அவர் அப்படி கேட்கவும் அருணாசலத்துக்கே அதிர்ச்சியாக இருந்தது.

''மாமா...''

''மாமாவாவது மண்ணாங்கட்டியாவது...'' என்றபடி அஸ்தி கலசத்தைப் பிடுங்கி கண்மாய் கரைமேல் வீசி எறிந்தார். அதுவும் பந்து போல பறந்து சென்று திம்மென்று வளர்ந்து நிற்கும் புற்களின் மேல் விழுந்து நின்றது. நல்லவேளை உடையவில்லை. மற்ற இருவரும் அடுத்த நொடியே கரை ஏறி அதை திரும்ப எடுக்கப் பார்க்க அந்த இடைவெளியில் அருணாசலம் மேல் பாய்ந்த அந்த ஆவேசக்காரர் அவனை அப்படியே தண்ணீரில் போட்டு அமுக்க ஆரம்பித்தார். ஒரு யானை பலத்துடன் அவனை அமுக்குவது போல அவனும் உணர்ந்தான். அவனால் மூச்சுவிட முடியவில்லை. கண்மாய் தண்ணீர் அவன் வாய் வழியாக கவளம் கவளமாக உள்ளிறங்கியது. கண்கள் பிதுங்கி வெறித்தன. அவனும் எதிர்த்துப் பார்த்தான். ஆனால் முடியவில்லை. கலயத்தை எடுத்தவர்களும் அதைப் பார்த்து விட்டு அப்படியே ஓடிவந்து அருணாசலத்தை அவரிடம் இருந்து மீட்கப் பார்த்தனர். ஆனால் அவர்களால் முடியவில்லை.

ஒரு கை அருணாசலத்தை தண்ணீருக்குள் அமிழ்த்த இன்னொரு கை அவர்கள் இருவரையும் சமாளிக்கப் பார்த்தது. அவர்களும் தள்ளப்பட்டு தண்ணீரில் விழ தண்ணீருக்கடியில் போராடிய அருணாசலம் ஒரு கட்டத்திற்கு மேல் முடியாமல் அப்படியே உயிரை விட்டான். கீழே காலடியில் நசுக்கி பிடித்திருந்த அவன் உடம்பும் பந்து போல மேலெழும்பியது. அந்த மனிதரிடமும் ஆவேசம் அடங்கி சட்டென்று அவரிடம் ஒரு இயல்புநிலை. அவர் அருணாசலத்தின் உடம்பையும் அந்த இரண்டு பேரையும் மலங்க மலங்க பார்த்தார்.

''மாமா... என்ன கொடுமை இது...''

''என்னடா சொல்றீங்க...''

''மசுரு... என்ன மாமா ஆச்சு உனக்கு. பேய் பிடிச்சவன் மாதிரி எதுக்கு அருணாசலத்தை, கழுத்தை நெரிச்சு கொன்னீங்க?''

''என்னது... நான் கொன்னேனா...? அருணாசலம் செத்துட்டானா?''

''இப்படி மிதந்தா வேற அர்த்தம் என்ன? எங்களையும்ல கொல்லப் பார்த்தீங்க. ஐயோ என்ன பிடி...? ஒத்தக்கைல எங்களைப் பந்தாடப் பாத்தீங்களே...?''

''எலே... எலே... எனக்கு எதுவும் தெரியாதுடா... என்னை ஏன்டா கொல்றீங்க...? ஐயோ அருணாசலம்... எப்டிடா செத்தே நீ?''

''கொல்றத் கொன்னுப்புட்டு பேச்சப் பார்...''

''டேய் நான் கொல்லலடா. உங்கள மாதிரி நான் கூட வந்தவண்டா...''

இடுப்பளவு நீரில் அவர்கள் முட்டிக் கொள்ள ஆவென்று பிளந்து விட்ட வாயோடு வெறித்த கண்ணிரண்டும் வானத்தைப் பார்க்க அருணாசலம் மிதந்து கொண்டிருந்தான்!

## திக்...திக்... திக்! - 7

'காவிரிக் கரையோரமாக கல்மண்டபம் ஒன்று உள்ளது. அதற்கு 'ஆட்டனத்தி மண்டபம்' என்று பெயர். அந்த நாளில் ஆடிப்பெருக்கு சமயம் பக்கத்து ஊர் சிவன் கோயிலில் இருந்து



அம்பாளும் சாமியும் அந்த மண்டபத்தில்தான் எழுந்தருளுவார்கள். அவர்கள் அப்படி எழுந்தருளும்போது அந்த நாளில் வாழ்ந்து வந்த ஒரு தேவதாசி சாமிமுன் நாட்டியமாடுவாள். அதை பார்க்கவென்றே பக்கத்து ஊரில் இருந்தெல்லாம் வண்டி கட்டிக் கொண்டு ஜனங்கள் வருவார்கள். அவளும் மிக மிக அழகானவள். அப்படி ஆடும் நாளைத் தவிர மற்ற நாட்களிலும் அவள் அந்த மண்டபத்தில் வந்து பயிற்சி எடுப்பாள். ஒரு ஆடிப் பதினெட்டு நாளில் சுவாமி முன் ஆடிக் கொண்டிருக்கும் போதே அவள் உயிர் பிரிந்து விட்டது. ஆட்டத்தின் உச்சகட்டமாக அவள் ஆடியபடியே வந்து சுவாமியை கட்டிப்பிடித்துக் கொண்டே உயிரை விட்டு விட்டாள்.

அதனால் தீட்டுப்பட்டு விட்ட அந்த சிலையையும் அந்த தாசியின் சமாதியோடு சேர்த்து புதைக்க வேண்டிய ஒரு நிலை!

அதே சமயம் இன்றும் ஆடி மாதம் 18ம் நாள் அந்த சமாதிக்கு சென்று தாசிக்கு அஞ்சலி செலுத்துபவர்கள் சமாதி முன் குனிந்து மண்டியிட்டு விழுந்து வணங்கும் போது சமாதிக்குள் ஜதி சப்தமும் சதங்கை சப்தமும் கேட்பதாகக் கூறுகின்றனர்.

நம்ப முடிகிறதா?'

அருணாசலம் கண்மாயில் பிணமாக மிதக்கும் செய்தி ஊருக்குள் பரவி அலறி அடித்துக் கொண்டு பலரும் வரத் தொடங்கி விட்டனர். காத்தாயி அதைக் கேட்டு திரும்பவும் மயங்கி விழுந்து விட்டாள். பிரசிடெண்ட் பஞ்சவர்ணத்துக் குத்தான் ஒரே தர்ம சங்கடமாகி விட்டது.

அருணாசலத்தை வயதான உறவுக்காரரே கொலை செய்து விட்டதைக் கேட்டு ஆடிப்போய் விட்டார். அவரோ, ''ஐயா! எனக்கு எதுவுமே தெரியாதுங்க... நான் சொல்றதக் கேளுங்க - இவங்க சொல்லித்தான் எனக்குள்ள ஒரு ஆவி இறங்குன மாதிரி இருந்ததே தெரிஞ்சிச்சு. போதாக்குறைக்கு மயானத்துல வெட்டியான் முக்கி வேற அவனையும் ஒரு ஆவி அலைக்கழிச்சதா சொன்னான். இதெல்லாம் சத்தியமுங்க.

www.cleanindians.com

நம்புங்க...'' - என்று சொன்னபடியே கேவிக்கேவி அழ ஆரம்பித்து விட்டார்.

பஞ்சவர்ணம் அவரைத் தன் வீட்டுத் திண்ணையிலேயே உட்காரச் சொல்லிவிட்டு கண்மாய்க்கரை நோக்கி நடந்தார். அவரோடு பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டனர். பாண்டித்தேவன் பட்டியே வேடிக்கை பார்த்தது. ''நம்ம ஊரு நல்லா இருந்துச்சு... இப்ப அதுக்கு என்னவோ ஆயிடிச்சு.'' - என்று பஞ்சவர்ணம் காதுபடவே பேசிக் கொண்டனர்!

## கண்மாய் வெளி!

அருணாசலம் மிதந்து கொண்டிருந்தான். கரைமேல் அஸ்திப்பானை பாதி உடைந்தும் உடையாமல் சாம்பலும் எலும்பும் சிதறிக் கிடக்க காட்சி தந்தது. கரைமேல் வரிசையாக ஊர்க்காரர்கள் நின்று வெறித்தபடி இருந்தனர்.

உபதலைவர் சண்முகமும் பூசாரியும் மலையாள தேசத்துக்கு சென்று விட்டதால் அவர்கள் நீங்கலாக அவ்வளவு பேரும் அங்கே இருந்தனர்.

''நிச்சயமா இது ஏதோ காத்து கருப்பு வேலைதான்.'' - என்று ஒருவர் தொடங்கினார்.

''முனுசாமின்னு சாமி மேலயே பழிய போடத் தெரிஞ்சோம். நல்லவேளை...''

''ஊருக்குள்ள எனக்குத் தெரிஞ்சு இப்படி காத்து கருப்பு நடமாடுறத நான் பார்த்ததேயில்லை. ஒரு உசுருக்கு ரெண்டு உசுரு போயிடிச்சு. ரெண்டு பேரும் உறவுக்காரங்க வேற... இந்த கொடுமையை எங்க போய்ச் சொல்ல...''

ஆளுக்கு ஆள் பேசிக் கொள்ள ஆரம்பித்து விட்டனர். பஞ்சவர்ணம் சங்கு ஊதியையும், வப்பாளத்தானையும் பார்த்தார். அவர்கள் இருவரும் கண்மாயில் இறங்கி அருணாசலம் உடம்பை இழுத்து வந்து கரையில் போட்டனர்.

அருணாசலத்தின் தாய் தகப்பன் இருவருமே பக்கத்து ஊர் சந்தைக்கு கடை விரிக்க போயிருந்தனர். எனவே அவர்களுக்கு தகவல் போய் அவர்கள் வந்து அவன் உடம்பை எரிக்க ஒருநாள் ஆனால் ஆச்சரியப்படுவதற்கில்லை. பஞ்சவர்ணம் அருணாசலம் உடம்பை அவன் வீட்டில் கொண்டு போய் போடச் சொல்லிவிட்டு

www.cleanindians.com



தன் சகாக்கள் பக்கம் திரும்பினார்.

''என்ன செய்யலாம்?''

''எங்களுக்கும் ஒன்னும் தோணலை...''

''அந்த கிழவன் வேணுமின்னு பண்ணலை. அவனுக்குள்ள ஏதோ ஒன்னு பூந்துதான் அந்த கிழவன் இப்படி நடந்துக்கிட்டிருக்கான்.''

''அதுதான் உண்மை. கேரளா பக்கம் போன நம்ம உபதலைவர் கொஞ்சம் வேகமா மாந்திரீக மந்திரவாதிங்களோட வந்தாதான் நமக்கும் ஒரு தெளிவு பொறக்கும்.'' - அவர்களின் அர்த்தமுள்ள உரையாடலுக்கு நடுவில் பஞ்சவர்ணத்தின் செல்போன் அவரைக் கூப்பிட்டது. அவரும் அதற்கு காதைக் கொடுத்தார்.

எர்ணாகுளத்திலிருந்து துணைத் தலைவர் சண்முகம் தான் பேசினார்.

''தலைவரே... இங்க புளியஞ்சேரிங்கற இடத்துல தாமோதர நம்பூதிரின்னு ஒருத்தரை பிடிச்கட்டேன். அவரும் எங்ககூட நம்ம ஊருக்கு வர சம்மதிச்சுட்டார். ஒரு ஆச்சரியம் பாருங்க... அவர் அட்ரஸ் தெரியாம நாங்க தடுமாறிக்கிட்டிருந்தப்போ அவரே எங்களத் தேடி வந்துட்டார். அவருக்கு - பூஜைல உக்காந்திருக்கைல நாங்க தேடி அலையறது தெரிய வந்துச்சாம்.''

- சண்முகம் சொல்லச் சொல்ல பஞ்சவர்ணத்துக்கும் பரவசமாகி விட்டது.

''சண்முகம்... கொஞ்சம் சீக்கிரமாக கிளம்பி வாய்யா... இங்க இன்னொரு பொணமும் விழுந்திடிச்சு...''

''அடக் கெரகமே... யாருங்க தலைவரே...''

''மாரிமுத்துவோட மாமன்மகன் அருணாசலம் தான். வேற யாரு...?''

''எப்படி?''

''இது வினோதமா நடந்த கொலை. அருணாசலத்துக்கு மாமா உறவாகற தர்மலிங்கத்துக்குள்ள காத்தோ கருப்போ புகுந்து அப்படியே. கண்மாய் தண்ணில அமுக்கியே கொன்னுடுச்சி. நான்கூட இப்ப கண்மாய்க்கரைல நின்னுகிட்டு தான் பேசிக்கிட்டிருக்கேன்.''

''அப்ப இது கெட்ட ஆவியோட வேலையா?''

''ஆமாம்... அந்த நம்பூதிரிகிட்ட விவரமா சொல்லி கூட்டிகிட்டு வா. ஆமா... எப்ப வந்து

சேருவிங்க?''

''எப்படியும் நாளைக்கு மதியம் ஆயிரும்...''

''வேகமா வாங்கய்யா... அதுவரை இங்க அடுத்து ஒரு பொணம் உழுவாம இருக்கணும்...''

''அதெல்லாம் எதுவும் ஆகாதுங்க. முனுசாமிக்கு நேர்ந்துக்குவோம். அது அசலான காவல் தெய்வம்னா இப்பத்தான் அது நமக்கு துணையா நிக்கணும்.''

''அதுவும் சரிதான்... நாங்கல்லாம் இப்பவே கோவிலுக்கு போய் கையக் கீறி ரத்தம் எடுத்து பலிபீடத்துல தெளிச்சு நேர்ந்துக்கறோம். நீங்க சீக்கிரம் வாங்க...''

- பஞ்சவர்ணம் பேசி முடித்து செல்போனை தன் ஜிப்பா பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். அவர் சகாக்களுக்கும் அவர் பேசியதை வைத்தே எல்லாமே தெரிந்திருந்தது.

''பிரசிடெண்ட்டய்யா... நாம இப்ப முனிசாமி கோயிலுக்கு போறோங்களா?'' - என்று கேட்டனர்.

அவரிடமும் மௌனமான ஆமோதிப்பு!

**ஊ**ஞ்சல் நிதானமாக ஆடிக் கொண்டிருந்தது. அதில் - நடந்தவைகளை எல்லாம் நினைத்து மௌனமாய் உட்கார்ந்திருந்தாள் ரஞ்சிதம். ஒருபுறம் ஊரில் நடக்கும் அநியாய சாவு. மறுபுறம் முந்தைய இரவில் ஞானசேகரன் வந்துவிட்டுப் போனது... இரவில் வந்துவிட்டு போனவன் பகலில் அப்போதுதான் வருபவன் போல வருவான் என்றுதான் கருதினாள். ஆனால் அவன் வரவில்லை. அவளுக்குள் அவனை ஏமாற்றிவிட்ட மாதிரி கூட ஒரு உறுத்தல்.

www.cleanindians.com

செண்பகமும் அவள் மௌனித்து கிடப்பதை பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். பலமுறை சாப்பிட அழைத்தும் அது அவள் காதில் விழவில்லை. இத்தனைக்கும் அவளுக்கு மிக பிடித்த அயிரை மீன் குழம்பு. அந்த வாசத்துக்கு தெருவில் போகிறவர்கள் கூட திரும்பிப் பார்த்தனர். ஆனால் ரஞ்சிதத்திடம் தான் பிரக்ஞையே இல்லை.

''ஏண்டி... நான் கரடியா கத்திகிட்டிருக்கேன். இப்படி எனக்கென்னன்னு உக்காந்துகிட்டிருக்கியேடி...'' - என்று அருகில் வந்து தலையில்



கொட்டவும்தான் அவள் பிரக்ஞை கலைந்தது.

''ஐயோ அம்மா...''

''என்ன ஐயோம்மா... சாப்பிட வான்னு எத்தனை வட்டம் கூப்பிட்றதாம்.''

''காதுல விழுவிலம்மா...''

''அதான் பாத்தாலே தெரியுதே. இதோ பாருடி... ஊரு உலகம்னா ஆயிரம் விசயம் நடக்கும். அதுக்கெல்லாம் கவலைப்படக் கூடாது. அதுலையும் நீ கல்யாணப் பொண்ணு. மனசை பதட்டமில்லாம வெச்சுக்கணும்.''

''முடியலியேம்மா...''

''இப்படியே இருந்தே... உன்னை நான் சென்னைக்கு என் அண்ணன் வீட்டுக்கே அனுப்பிடுவேன்.''

''அதைச் செய்யம்மா... எனக்கே இங்க இருக்க என்னவோ மாதிரி இருக்குது தெரியுமா?''

''போதுண்டி... வந்து சாப்பிட்ற வழியப் பாரு. அயிரை மீன் குழம்பு...''

- கையை பிடித்து மகளை இழுத்துச் சென்று வட்டமான சில்வர் தட்டின் முன் உட்கார வைத்தாள். ஆவி பறக்க பச்சரிசி சோற்றைப் போட்டு நன்றாக ஒரு குழம்புக் கரண்டியில் நெய்யை விட்டாள்.

வாசம் இறங்கடித்தது.

அப்போது அவளுக்கும் ஞானசேகரன் நினைவு திரும்ப வந்தது.

''அம்மா.''

''என்னடி...''

''நான் ஒண்ணு சொன்னா ஆச்சரியப்படுவே நீ.''

''என்னன்னு சொல்லு.''

''உன் மாப்பிளை இன்னும் மிலிட்டரில போய் சேரலைம்மா...''

''என்னடி சொல்றே?''

''ஆமாம்மா... ராத்திரி 11 மணிக்கு ஜன்னல் பக்கமா வந்து நின்னுகிட்டு என்னை வெளிய வரச் சொன்னாரு...''

''நெசமாவா?''

''அதை ஏன் கேக்கறே... நான் உள்ள வான்னு கூப்பிட்டா வரவே இல்லை. நீ கூட சொன்னியே வீட்டை யாரோ சுத்திச் சுத்தி வந்த மாதிரி இருந்துச்சின்னு...''

''அட ஆமாம்... அது மாப்ளை தம்பிதானா! ஏன் உள்ள வரலை. எங்கள எழுப்பி இருக்கலாம்ல...?''

''அதான் எனக்கும் புரியல...!''

''அட கூறு கெட்டவளே. அப்பவே எங்களை எழுப்பி ஏண்டி சொல்ல...?''

''அவர்தாம்மா உதட்டுமேல கையவெச்சு 'வேண்டாம்'னு சைகை காட்டினார்...''

''போடி போ... சரி காலைல எழுந்திரிச்ச உடனேயாவது சொல்லலாம்ல?''

''அவரா வருவாருன்னு நான் நினைச்சேம்மா... 'வா நாம தனியா போய் பேசுவோம்'னாரு. நான்தான் 'எல்லாம் எங்க வீட்லையே பேசிக்கலாம். யாரும் எதுவும் சொல்லமாட்டாங்க'ன்னு சொன்னேன்.''

''பாவி மகளே... மாப்ளையா வரப்போற ஒரு மனுஷன்கிட்ட இவ்வளவு பேசின நீ அவரை கூப்பிட்டு கவனிக்கணும்னு நினைக்கவேயில்லையா?''

''ஐயோ அம்மா... நானே அவர் விஷயத்துல குழம்பித்தாம்மா இருந்தேன். அவர் ரகசியமா கூப்பிட்றதை உங்கிட்ட சொன்னா அவர் கோவிச்சுக்குவாருன்னு நினைச்சேன்...''

''அடி போடி போக்கத்தவளே... உங்கப்பாக்கு மட்டும் இந்த விஷயம் தெரிஞ்சா என்ன நடக்கும் தெரியுமா?''

''அது சரிம்மா... ராத்திரி வந்தவர் அப்படி எங்கம்மா போயிருப்பாரு?''

''அதான்டி எனக்கும் புரியலை. ஊருக்குள்ள காத்தும் கருப்பும் திரிஞ்சிகிட்டு இருக்கற வேளைல அவருக்கு ஒருவேளை எதாவது ஆயிருக்குமோ?''

செண்பகம் அங்கு தொட்டு இங்கு தொட்டு பயத்திடம் வந்து நின்றாள். அதன் பிறகுதான் ரஞ்சிதத்துக்கே உரைத்தது.

''இரு வரேன்... உங்கப்பா பஞ்சாயத்து ஆபீஸ்லதான் இருப்பாரு. போய் சொல்லிட்டு வர்றேன்.''

செண்பகம் அப்பொழுதே கிளம்பி விட்டாள். ரஞ்சிதத்துக்கு நெஞ்சையடைத்தது. சூடான மீன் குழம்புச் சோறும் ஆறி அவலாகி விட்டிருந்தது. அதற்குமேல் அதைச் சாப்பிடவும் பிடிக்கவில்லை. அப்படியே தண்ணீரை ஊற்றி கைகழுவிக்



கொண்டவள் எழுந்தாள். அவளுக்கு அப்போது இருக்கும் மனநிலைக்கு வீட்டில் அடைந்து கிடக்கவும் பிடிக்கவில்லை. வெளியே போகவும் வழி இல்லாதபடி செண்பகம் போய்விட்டிருந்தாள்.

ரஞ்சிதத்தின் மனது கிடந்து அலை பாயத் தொடங்கியது!

## திக்...திக்... திக்! - 8

'மனித உயிர்கள் மரணத்துக்குப் பின் என்னாகிறது என்கிற கேள்விக்கு விஞ்ஞானம் உருப்படியாக ஒரு பதிலைக்கூட சொல்லவில்லை. விஞ்ஞானம் பேசுவதே தங்களை புத்திசாலிகளாகக் காட்டும் என்று கருதும் சிலரோ 'உயிர் என்பது உடலை விட்டுப் பிரிந்தபின் காற்றோடு கலந்து விடுகிறது. அதாவது ஒரு பலூனில் உள்ள காற்றை விடுவித்தால் என்னாகுமோ அப்படியே தான் உயிர்க்காற்றும் புறக்காற்றில் கலந்து விடுகிறது' என்கின்றனர். அதையே இறுகப் பற்றிக் கொண்டு, 'உண்மைதான். அப்படி கலந்து விடும் உயிர்க்காற்று பல நேரங்களில் புறக்காற்றுடன் முழுவதுமாகக் கலந்து விடுவதில்லை. அது தனித்து திரிகிறது. வாசம், நாற்றம் போன்றவை கூட காற்றில் கலந்து கரைந்து விடுபவைதான் என்றாலும் அதற்கொரு கால அவகாசம் இருப்பது போல உயிர்க் காற்றானதும் இறப்புக்கு பின் சில பல செயல்களை செய்கிறது' என்கின்றனர். அதற்காக நிறைய உதாரணங்களையும் காட்டுகின்றனர்!'

ஆட்டுப்பட்டியின் மூங்கில் படப்பு கதவைத் திறந்து ஆடுகளை வெளியேற்றிக் கொண்டிருந்தான் மாயன். மிகச் சரியாக 15 ஆடுகள். அதில் ஒரு கிடாய் கொஞ்சம் கோணல் கொம்போடும், சின்னதாடியோடும் பார்க்க வித்யாசமாக இருந்தது. சரியான ரவுடி ஆடு அது... பன்னிரண்டு அடி உயரத்தில் இருக்கும் கொப்பையும் ஓடிவந்து தாவியே வாயால் கவ்வி விடும். அதேபோல தரையோடு கிடைக்கும் தீவனத்தையும் தனது சக ஆடுகள் உண்ண விடாது. அதை மேய்ப்பது என்பது

www.cleanindians.com

மாயனுக்கு ஒரு சவாலான விஷயம். எனவே அதற்காகவே முரட்டு பிளாஸ்டிக் கயிற்றால் ஆன சாட்டை ஒன்றை வைத்திருந்தான். ஒரு வீறு வீறினால் போதும்... வலி உயிர் போய்விடும். அதுவும் அதற்கு மட்டுமே பயந்தது. ஆடுகளோடு மேய்ச்சலுக்கு கிளம்பி விட்டவனை அவன் தாய்க்காரி பார்த்துவிட்டு ஓடி வந்தாள்.

''எலே எங்கடா கிளம்பிட்டே?''

''மேய்ச்சலுக்குத்தான்... ஆடுங்களோட சினிமா பாக்கவா போவாங்க?''

''வாயிடா உனக்கு... ஊர் இருக்கற இருப்பு தெரியும்ல?''

''ஆமா... முனுசாமி திரியுது ராமசாமி திரியுதுன்னுகிட்டு கிடக்காங்க. சாமிக்கு இந்த ஊரைச் சுத்தறதுதான் சோலி பாரு...''

- அவன் பதிலிலேயே அவன் நம்பவில்லை என்பது துல்லியமாக தெரிந்தது.

''வாய் பேசாதடா:.. ஒரு உசுருக்கு ரெண்டு உசுர் போயிருக்குது. ஊரே மிரண்டு கிடக்கும்போது உனக்கு ஆடு மேயறதுதான் முக்கியமாக்கும்...''

- அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த கிடாய் வெகுதூரம் போய் விட்டது.

''அடக் கெரகமே... கிடா ஓடிப் போச்சு பாரு... நானும் போறேன்... ஆத்தோய்..! நீ ஒண்ணும் அநாவசியமா விசனப்படாதே. நான் பனங்காட்டுப் பக்கமெல்லாம் போவ மாட்டேன். கிழக்க நாயக்கர் வயக்காட்டுப் பக்கமே கிடக்கேன். மதியம் கஞ்சி கொடுத்து விடு...''

- என்றபடியே சாட்டையை சுழற்றிக் கொண்டு கிடாயைப் பிடிக்க ஓடினான். அதுவோ 'வாடா வா... உன்னை வெச்சுக்கறேன்' என்னும் கணக்காக அப்படி ஒரு ஓட்டம் ஓடியது! நல்லவேளை எதிரில் காட்டில் விறகு பொறுக்கப் போயிருந்த மாயனின் மாமன் மகன் பரமு விறகு கட்டோடு வந்து கொண்டிருந்தான். கிடாயை பார்க்கவும் விறகுக் கட்டையை கீழே போட்டு விட்டு ஓடி வந்து கிடாயை ஒரே அமுக்காய் அமுக்கிப் பிடித்து அதன் காதைத் திருகி, ''கொழுப்பெடுத்த ஆடே... உன்னை எப்ப பிரியாணி ஆக்கப் போறேனோ தெரியல...'' என்றான். மாயனும் வந்து பிறகு அதை பிடித்துக்

www.cleanindians.com



கொண்டான்.

''எங்கடா கிளம்பிட்டே...?''

''மேயத்தான்... நீ மேயப் போவலையா?''

''ஊருக்குள்ள பேய் ஒண்ணு திரியுதாமில்ல...''

''பேயா... முனுசாமின்னுல்ல சொன்னாங்க?''

''சாமி இல்லையாம்... பேயிதானாம்!''

''அப்புடின்னு யாரு சொன்னாங்க...?''

''ஊரே பேசிக்குது.- முதல்ல காளிமுத்து... இன்னிக்கு காலம்பற பாலூத்த போனப்ப அருணாசலம்... அடுத்து யாரோ?''

''அடக் கெரகமே... செத்த ரெண்டு பயலுகளும் காத்தாயி குடும்பமா போச்சே...''

''உனக்கும் அவ மேல ஒரு கண்ணுல்ல... பாத்து...''

''போடா கோட்டிப் பயலே. பேயி, பிசாசுன்னுகிட்டு. அந்த ரெண்டு பயலுகளும் மருதன் கோஷ்டியோட சேர்ந்து பக்கத்து மலைல சந்தன மரம் வெட்டப் போவானுங்க. மருதன் கோஷ்டி எப்படின்னுதான் நமக்கு தெரியும்ல...?''

''ஓ... நீ அப்படி கணக்கு போட்றியா... அப்ப மருதன் கோஷ்டி ஆளுங்கதான் இவனுங்கள கொன்னுப்புட்டு பேய்னு கிளப்பி விட்றுக்கானுங்களா?''

''பொறவு... பேயாம்ல பேய்... எங்க என் காதுத்தரப்புல வரச் சொல்லு பாப்போம்...''

''அதுசரி... அருணாசலம் செத்தது நாலு பேர் பாத்துக்கிட்டு இருக்கும் போதே கம்மாக்கரைல... அவனை அவன் மாமா தர்மலிங்கமேல்ல தண்ணில அமுக்கிக் கொன்னது...''

''தர்மலிங்கம் மாமாவா... அந்த கிழட்டுப் பயலா...''

''பொறவு... பிரசிடென்டய்யாவே இந்த சிக்கலை எப்படி தீத்துக்கறதுன்னு தெரியாமல்ல திணறிகிட்டிருக்காரு...''

''ஆங்... இப்ப எனக்கு விளங்கிடிச்சு.''

''என்ன?''

''தர்மலிங்கமும் மருதனும்கூட கூட்டாளிங்கதானே?''

''அப்ப கூட்டாளிக்காக தர்மலிங்கம் மாமா அருணாசலத்தை தண்ணில அமுக்கி கொன்னுட்டாரா?''

''ஏன் இருக்கக் கூடாதுங்கறேன்? உள்காரணத் தோட அவர் கொலை செய்துட்டு பேய், பிசாசுன்னு நம்பற மாதிரி நடிச்சிருக்கலாம்தானே?''

- மாயன் கையை ஆட்டி ஆவேசமாகக் கேட்டதை அதற்குமேல் பரமுவாலும் மறுக்க முடியவில்லை. நெடுநேரம் மௌனமாகவே நின்றான்.

''சரி... நீ இப்படியே யோசிச்சுக்கிட்டிரு. நான் நம்ம தாழங்குட்டை பக்கமா ஆடு மேச்சுக்கிட்டு கிடக்கேன். நீ வேணா பாரு. நான் நினைச்சதுதான் 'சரின்னு போகப்போக உனக்கும் தெரிய வரும் பாரு...''

- என்ற மாயன் கிடாயை ஒரு கயிற்றைக் கட்டி இழுத்துக் கொண்டு மற்ற ஆடுகளை கம்பாலேயே அணைத்தவனாக தாழங்குட்டைப் பக்கம் சென்றான். அவனை சில ஊர் பெருசுகளும் ஆச்சர்யமாகத்தான் பார்த்தனர்.

''எலே மாயா... ஊருக்கெல்லாம் ஒருவழின்னா உனக்கு ஒரு வழியாலே...?'' - என்றார் ஒருவர்.

''நான் ஒண்ணும் பயந்தோளி கிடையாது மாமோய்...''

- என்றான் அவரிடம்.

''விடலைப் பையன்கறது சரியாத்தாண்டா இருக்கு. பட்டாத்தான் தெரியும்.''

''இப்படியே பேசிக்கிட்டு உருப்டாமலே போயிடுங்க. தீப்பெட்டி கணக்கா போனும், சிலேட்டு கணக்கா டிவியும் வந்து ஊர் உலகமே இப்ப நம்ம ஊட்டுக்குள்ளே தெரிஞ்சுக்கிட்டு கிடக்கு. இன்னமும் பேயி பிசாசுன்னா என்ன மாமா அர்த்தம்?''

- மாயன் கேட்டதிலும் அர்த்தம் இருப்பது போலத்தான் சிலர் உணர்ந்தனர். வழியில் ஒரு புளிய மரத்தடியில் ஒரு கூட்டம் சீட்டாடிக் கொண்டிருந்தது. மாயனும் கிடை ஆட்டை கையில் பிடித்தபடியே எட்டிப் பார்த்தான். அவனைப் பார்த்து - ஆடுபவர்களில் ஒருவனான சுந்தரம் என்பவனும் சிரித்தான்.

''என்ன சுந்தரண்ணே... இன்னிக்கு ஆட்டம் எப்படி?''

''எங்க மாயா... உக்காந்ததுல இருந்தே ஒண்ணும் சொகமில்லே. அஞ்சு ரவுண்டு ஆடியும்



ஒரு பத்து ரூவா நிக்கலே. ஹூம் இன்னிக்கு கெட்ட கிரகம் பிடிச்சு ஆட்டுதுன்னு நினைக்கறேன்.''

''உனக்கு ஆடத் தெரியாததுக்கு கிரகம் என்னய்யா பண்ணும்?''

''அப்படிக் கேளுடா என் சிங்கம். கிரகமாம்ல கிரகம்...!''

''இங்க இவன் கிரகம்கறான்... ஊருக்குள்ளயோ பேயி முனின்னு ஒரே திகட்டல். நாம எந்தக் காலத்துலடா இருக்கோம்?''

- சீட்டாடிக் கொண்டே அவர்களிடம் பலவிதமான கருத்துப் பரிமாற்றம். மாயனுக்கும் ஆடு மேய்வதற்கு ஒரு கை ஆடிப் பார்த்தால் தேவலை என்று தோன்றியது.

''சுந்தரண்ணே..! ஒரு பத்து ரூவா கடனா கொடுண்ணே. நான் ஒரு கை ஆடிப் பாக்கறேன்.''

''பார்ரா... இங்க நானே அம்புட்டையும் விட்டுப்புட்டு உக்காந்துருக்கேன். எங்கிட்டப் போய் கேக்கறியே மாயா...''

''எலேய் மாயா... சுந்தரம்கிட்டத்தான் கேப்பியா? என்கிட்ட கேக்க மாட்டியா?''

''ஏழுமலைண்ணே... இப்ப என்ன... உங்ககிட்ட கூட கேக்கறேன். கடன்தானே... தாங்க!''

''கடன்லாம் எதுக்கு... சும்மாவே தரேன். அதுவும் பத்து ரூவா இல்ல. நூறு ரூவாயே தரேன். ஆனா நீ ஒரு காரியம் பண்ணணும்!''

''என்னண்ணே பண்ணணும்?''

''என் மோதிரம் ஒண்ணு... முழுசா ஒரு பவுன். பவழம் வெச்சு செஞ்ச மோதிரம்.''

''அதை அடகு வைச்சு பணம் வாங்கிட்டு வரணும். அதுக்காக நான் பக்கத்துல திருப்பத்தூர் வரை போய்ட்டு வரணுமாக்கும்?''

''அவசரப்பட்றியே... அடகும் இல்ல... குடகும் இல்ல... நான் சொல்றத நல்லா கேட்டுக்க... நேத்து காலைல நான் ஒரு சோலியா நூத்தி எட்டாம் பனங்காட்டுப்பக்கம் போனப்போ அங்க என் மோதிரம் தவறிவிழுந்திடுச்சி. வீட்டுக்கு வந்து பார்த்தப்போதான் தெரிஞ்சிச்சு. திரும்ப தேடிப் போறதுக்குள்ள தான் காளிமுத்து அந்த பக்கம் போய் செத்து வெச்சான். அதைப் பார்த்த அருணாசலமும் இன்னிக்கு உசுரோட இல்ல.

www.cleanindians.com

ஊர்லையும் யாரும் அந்தப் பக்கம் போக வேண்டாம்னு தமுக்கு போட்டுட்டாங்க...''

- ஏழுமலை என்கிற அந்த நபர் எங்கு வருகிறார் என்பது எல்லோருக்குமே புரிந்தது. மாயன் சற்று திருதிருவென்று தான் விழித்தான்.

''என்னலே... பேயாவது பிசாசாவது. எல்லாம் டுபாக்கூர்னு நீ உன் மாமன் மகன் பரமுகிட்ட பேசிக்கிட்டிருந்ததை நானும் வர்ற வழில கேட்டேன். அதான் உன்கிட்ட விஷயத்தை சொன்னேன். நீ என்னன்னா இந்த முழி முழிக்கறே...''

''அட என்னப்பா நீ... எவ்வளவு வேணும்னாலும் பேசலாம். வாய்சவடால்தானே? காசா, பணமா?''

- ஒருவன் ஒரு சீட்டை இறக்கியபடியே மாயன் மனதை ஒரு கொத்து கொத்தினான்.

மாயனுக்கு கிள்ளிவிட்ட மாதிரி ஒரு கோபம் வந்து விட்டது.

''ஏய்... என்னா விட்டா பேசிகிட்டே போறீங்க... என்னைய உசுப்பேத்தி ஆழம் பாக்கறீங்களா? இப்ப சொல்றேன். இந்த பேய் பிசாசு சமாச்சாரமெல்லாம் என் வரைல டுபாக்கூர்தான். இப்பவே போய்...''

- என்று வேகமாக அந்த மோதிரத்தை எடுத்து வருவதாகக் கூற வந்தவன் நாக்கை மடக்கிக் கொண்டு ''நான் வரேன்....'' என்று எழுந்தான்.

''டேய் என்னடா... என்னமோ பெரிய வீரனாட்டம் வாயைத் திறந்தே. அப்படியே பல்டி அடிச்சிட்டே...''

''ஆமாம்... பல்டி அடிச்சிட்டேன். அப்படியே நினைச்சிக்க. அதான் எனக்கும் நல்லது...''

மாயன் அசரவில்லை.

ஆனால் கேள்வி கேட்ட நபருக்கு மட்டும் சந்தேகமாக இருந்தது. மாயனும் தன் கிடாயை பிடித்துக் கொண்டு அங்கும் இங்குமாய் நின்று கொண்டு கிடைத்த புற்களை கரித்துக் கொண்டிருந்த தன் மற்ற ஆடுகளோடும் தன் விடு நோக்கி திரும்பத் தொடங்கினான்.

''மாப்ள... மாயன் கில்லாடி! ஆடு மேய்க்கப் போகாம திரும்பி வீட்டுப் பக்கம் போறான் பார்.''

''ஆமாண்டா... நூறு ரூவாய்க்கு ஆசைப்பட்டுக்கிட்டு பணங்காட்டுப் பக்கம்

www.cleanindians.com



போவான் - எனக்கும் மோதிரம் கிடைக்கும்னு நினைச்சேன். ஆனா சொடேர்னு ஏமாத்திபுட்டானே...''

''அவன் புத்திசாலி... இப்பவும் சொல்றேன்... அவன் பயந்துக்கிட்டுல்லாம் திரும்பிப் போகலை.''

''பின்னே...?''

''பத்தாயிரம் மதிப்புள்ள மோதிரத்தை எடுத்துத்தந்தா இவர் நூறு ரூவாதானே தருவாரு?''

''ஆமாம்... மாடு மேய்க்கற பயலுக்கு நூறு ரூவா போதாதா?''

''இப்படியெல்லாம் நீ யோசிக்கவும் தான் சிக்கலாகிப் போச்சு. அவன் இப்ப அங்க போய் அந்த மோதிரத்தை எடுத்துக்கிட்டா பத்தாயிரமும் போச்சல்ல...?''

''அடிஆத்தி... அவன் அப்படி யோசிக்கிறானா...?''

''சந்தேகம் இருந்தா என் கூடவே வந்து பாருங்க. அவன் பணங்காட்டுப் பக்கம் போய் மோதிரத்தை தேடி எடுத்துக்காட்டி நான் காதை அத்துக்கறேன்...''

- அவர்கள் பேச்சு திசைமாறிப் போனது. சீட்டாட்டமும் அத்தோடு அறுந்து கொண்டது. மோதிரத்தை தொலைத்து விட்ட ஏழுமலை முகம் எறும்பு ஊறும் ரகத்துக்கு மாறி விட்டது.

## திக்...திக்... திக்! - 9

'ஒரு ஆஸ்பத்திரியில் உயிருக்கு துடித்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண். அவளுக்கு உரிய ஆபரேஷன் செய்தால் பிழைத்து விடுவாள். ஆனால் அவள் ஒரு ஏழைப் பெண். வீடுகளில் பத்து பாத்திரம் தேய்ப்பவள். எனவே அவளுக்கு உரிய ஆபரேஷன் செய்தால் பிழைத்து விடுவாள். ஆனால் அவள் ஒரு ஏழைப்பெண். வீடுகளில் பத்து பாத்திரம் தேய்ப்பவள். எனவே அவளுக்கு ஆபரேஷன் செய்வதில் டாக்டர் தீவிரம் காட்ட வில்லை. இதனால் அந்த பெண்ணும் இறந்து விட்டாள். ஓசைப்படாமல் அந்த பெண்ணின் உடம்பை ஒப்படைத்து உறவினர்களிடம்

விட்டார் டாக்டர். ஆனால் அதன்பின்பு தான் அந்த டாக்டருக்கு சோதனையே ஆரம்பம் ஆனது. அடுத்தடுத்து அவர் ஆபரேஷன் செய்த போதெல்லாம் அவரது கை நடுங்கியது. இடுப்பை யாரோ கிள்ளுவது போலவும், தன் அருகே யாரோ நின்று கொண்டு தன்னை உற்றுப் பார்ப்பது போலவும் எண்ணினார். இதனால் அவரால் ஆபரேஷனே சரியாக செய்ய முடியவில்லை. ஒரு பணக்காரருக்கு செய்த ஆபரேஷனும் தவறாகி அவர் இறந்து விட - அவரைச் சேர்ந்தவர்கள் டாக்டர் மேல் வழக்கு தொடர்ந்தனர். அதன்பின் அவர் டாக்டராகவே நடமாட முடியாதபடி ஆகி ஒரு நாள் அவர் ஆபரேஷன் கருவிகளாலேயே தன்னை குத்திக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு போய் விட்டார்.

சாகக் கிடந்த அவர் 'எனக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட அந்த ஏழைப் பெண் தான் காரணம். அவளுக்கு நான் ஆபரேஷன் செய்யத் தவறியதால் தான் நான் இப்படி ஆனேன். அவள் ஆத்மா என்ன நன்றாகவே பழிவாங்கி விட்டது..' - என்று கூறிவிட்டு அவர் உயிர் பிரிந்ததாம்!

www.cleanindians.com

ஏழுமலையும் அவன் நண்பர்களும் அதன் பிறகு சும்மா இல்லை. மாயன் என்ன செய்கிறான் என்று பார்ப்பதற்காக அவனை அவனுக்கே தெரியாமல் பின் தொடர்ந்தனர். மாயனும் ஆடுகளை பட்டியில் அடைத்தான். கிடாயை மட்டும் கையில் பிடித்துக் கொண்டான். பனங்காட்டுப்பக்கமாய் கிளம்பி விட்டான்.

ஏழுமலைக்கு ஆச்சரியமாகி விட்டது.

''எம்புட்டு தெகிரியம்டா இவனுக்கு...'' என்றான் தன் சகாவிடம்.

''பின்ன என்ன... நம்பள மாதிரி வெட்டி பந்தாவா பண்ணிகிட்டிருப்பாங்க...''

''டேய்... அவன் போய் மோதிரத்தை எடுத்துட்டா ஒரு பவுன் மோதிரமும் போச்சேடா...''

''அப்ப நீயும் போய் தேடு. யார் வேணாம்னா?''

''டேய் டேய்... நீங்களும் வாங்கடா...''

''வர்றோம்... ஆனா அதனால எங்களுக்கு என்ன பிரயோஜனம்?''



''அடப் பாவிங்களா... என்னடா நீங்களும் இப்படி பேசறீங்க?''

''எல்லாம் நீ சொல்லிக் கொடுத்ததுதான். பத்தாயிரத்துக்கு நூறு ரூவா தரேன்னு சொன்ன கர்ணப் பிரபு இல்லையா நீ.''

''சரி... எவ்வளவுடா கேக்கறீங்க?''

''மோதிரம் கிடைச்சா சரி பாதிய தரேன்னு சொல்லு... வர்றோம்...''

''சரி பாதியா?''

''விட்டா... அம்புட்டும் மாயனுக்கு போயிடும். இப்பக்கூட அவனை முந்திக்காட்டி பெப்பே தான்...''

- நண்பர்கள் ஏழுமலை வயிற்றில் புளியைக் கரைத்தனர். ஏழுமலைக்கு சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போலத்தான் இருந்தது.

மாயனோ கிடாயை பிடித்துக் கொண்டே பனங்காட்டுப் பக்கமாய் போய்க் கொண்டிருந்தான். இடைப்பட்ட நாடார் கடையில் ஒரு பாக்கெட் கடலை மிட்டாய் வாங்கிக் கொண்டான். வியாபாரம் செய்த நாடாரிடம் சுரத்தே இல்லை. அவனிடம் எப்பொழுதும் சகஜமாக பேசுகிறவர், காசை வாங்கிக் கொண்டு கண்ணாடி ஜாடியை திறந்து மிட்டாயைத் தருவதில்தான் குறியாக இருந்தார். உள்ளே யாரோ அழும் சப்தம்.

நாடார் உட்கார்ந்த இடத்தில் இருந்தே அதற்கு ரீ-ஆக்ட் செய்தார்.

''அவளைக் கொஞ்ச நேரம் அழுவாம சும்மா இருக்கச் சொல்லு. பொழுது சாயப்போற நேரம்! வியாபாரம் நடக்கற இடத்துல அழுதுகிட்டிருந்தா வர்ற லட்சுமி அப்படியே திரும்பிப் போயிடுவா.'' என்கிற அவர் குரலின் கடுமை மாயனுக்கு புதிது.

''யார் நாடாரே அழுவறது?''

''உனக்கென்ன மாயா... மிட்டாய வாங்கினியா, கிளம்பினியான்னு இரு.''

''அட... உக்கார வெச்சு ஊர்க்கதை அம்புட்டையும் பேசற நீங்களா நாடாரே இப்படி பேசறீங்க?''

''வாயப் புடுங்காம புறப்பட்ற வழியப் பாரு மாயா...''

- அவர் அதட்ட - கண்ணீர் விழிகளோடு அவர்

மகள் மல்லிகா அவனைக் கடந்து போக அவனுக்கு மேலும் ஆச்சரியம். மல்லிகாவுக்கு சிரித்த முகம்! அவளா அழுவது?

''ஹூம்... இந்த ஊர்ல இன்னும் இந்த மாதிரி எத்தனை பாக்கப் போறேனோ...'' என்றபடியே கிடாயுடன் நடந்தான் மாயன்.

கிடாய் அவன் பிடியில் பரிதாபமாக பார்த்தது.

அவன் மட்டும் கயிற்றை விட்டால் துள்ளிக் கொண்டு ஒரே ஓட்டம். கிடாய்க்கும் பனங்காடு என்றால் மிக இஷ்டம். அங்கே அதற்கு மிகப் பிடித்த ஆவாரம் புதர்கள் மிக அதிகம். பயமும் அதிகம்... நரிகளின் கண்களில் பட்டு விட்டால் அவைகள் வட்டம் கட்டி வளைத்து நிற்கும்.

மாயன் உற்சாகமாய் நடந்து கொண்டிருந்தான். வீட்டுக்கு வீடு எலுமிச்சம்பழம் தொங்கிக் கொண்டிருந்தது. பஞ்சாயத்தில் வந்து தந்து விட்டு போயிருந்தனர். அவனுக்கும் ஒன்று தரப்பட்டது. அது அவன் பாக்கெட்டில் இருந்தது. தொண்ணூறு சதம் அவன் வரையில் பேய் பிசாசெல்லாம் கிடையாது. ஒரு பத்து சதம் அந்த பயம் அவனுக்கு இருக்கத்தான் செய்தது. அதுதான் எதற்கும் இருக்கட்டும் என்று எலுமிச்சம் பழத்தை பாக்கெட்டில் போட்டுக் கொண்டிருக்கிறான். கிடாயோடு அவன் தைரியமாக போகும் அழகை சிலர் பார்த்தனர். அதுவும் பனங்காட்டு பக்கமாய் அவன் போவது சிலரை உறுத்திற்று.

அவனை அவனுக்கே தெரியாமல் ஏழுமலை குரூப்பும் பின்தொடர்ந்து கொண்டிருந்தது.

விதி வேலை செய்யத் தொடங்கி விட்டால் மதி அதற்கேற்றாற் போல மடங்கிப் போகும். கவனிக்க வேண்டியவர்கள், கவனித்துக் கொண்டிருப்பவர் கள்கூட கவனியாமல் போவார்கள். மாயனையும், ஏழுமலையையும் அவன் நண்பர்களையும் கூட யாரும் பெரிதாக கவனிக்கவில்லை.

ஊர் எல்லையில் ஒரு பெரிய மேடு உண்டு. அதைக் கடந்து இறங்கி விட்டால் அந்த பக்கமாக யார் போகிறார்கள் வருகிறார்கள் என்பதே தெரியாது.

கிடாயோடு முதலில் மாயன் மறைந்தான்.

பின்னாலேயே சென்ற ஏழுமலையும் அவன் சகாக்களும் கூட மறைந்தனர்.

www.cleanindians.com



காற்று சப்தத்தோடு வீசிக் கொண்டிருந்தது. பனை ஓலைகள் உரசிக் கொள்ளும் சப்தம் துல்லியமாகவே கேட்டது. அந்த சரசரப்பான ஓசைக்கு நடுவில் காற்றின் வேகம் கூடும் போதும் குறையும் போதும் ஹோவென்று ஒருவித சப்தம். அதுவே ஊளைச் சப்தம் போல மாறிடும் போது அந்த பனங்காட்டுக்குள் சில வயதான கிழவிகள் அழ முடியாமல் அழுகிற மாதிரி இருந்தது. நடுநடுவே அசலான நரிகளின் ஊளைச் சப்தமும் சேர்ந்து கொண்டது.

இரை கிடைக்காத நரிகள் வானம் பார்த்தபடி வாயைப் பிளந்து கொண்டு ஊளையிடும். அந்த சப்தம் கேட்பவர்களுக்குள் ஒருவித பீதியை மூட்டுவதாக இருக்கும். அதிலும் ஊருக்குள் அச்சமும் பயமும் அபரிமிதமாக பரவிக் கிடக்கும் இவ்வேளையில் சாதாரண சப்தம்கூட மனதை திகிலில் ஆழ்த்துவதாகவே இருக்கும்.

மாயனும் அப்படித்தான் உணர்ந்தான்.

தனக்கு ஏற்ற துணையாக ஆட்டுக்கிடாயை பிடித்துக் கொண்டிருந்தான். அதுவும் ஒரு ஓட்டப்பந்தய வீரனைப் போல்தான் அவன் பிடியில் நின்று கொண்டிருந்தது. நாலாபுறமும் அதன் இளம் பச்சைநிற கண்கள் ஊடுருவியபடி இருந்தன. செதில் செதிலான உடம்போடு பனை மரங்கள். அந்த செதில்களின் மேல் மரப்பல்லிகள் சில படுத்திருந்தன. தரைப்பரப்பில் ஆவாரம் புதர். நடுநடுவே சில பாறைத் திட்டுகள். அந்த திட்டு ஒன்றின் மேல் உடும்பு ஒன்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. அதன் டயர் உடம்பும் இமைக்காத பார்வையும், ஈட்டி எறிவதுபோல வந்துவிட்டு செல்லும் இரட்டை நாக்கும் அந்த சலசலப்பான சூழலில் ஒரு சாதாரண காட்சியாகவே தெரியவில்லை.

ஒருசில நிமிடங்கள் அந்த காட்சிகளில் நின்று விட்ட மாயன் மெல்ல கீழே குனிந்து தரைப் பரப்பை பார்க்கத் தொடங்கினான். அவனுக்கு பின்னாலேயே. ஒரு நூறு அடி தொலைவில் ஏழுமலையும் அவன் நண்பர்களும்! ஏழுமலை பார்வை மாயன் மேலேயே தான் இருந்தது. அவனுக்கு எதுவும் ஆகாதவரை தங்களுக்கும் எதுவும் ஆகி விடாது என்று ஒரு எண்ணம். கூட

வந்த நண்பர்களிடம் லேசான பதைப்பு.

மேற்கு பக்கமாய் சூரியனும் இறங்கிக் கொண்டிருந்தான். காற்றுக் காலமானதால் காற்று வீச்சிடம் மட்டும் பெரிதாக எந்த குந்தகமும் இல்லை. சில நேரங்களில் வேகமான வீச்சு காரணமாக புழுதிக் கவளமெல்லாம் மேலெழும்பியது. அது யாரோ ஒருவர் படுத்திருந்த நிலையில் எழுந்து நின்று உதறி விட்டுக் கொள்வதை போலக் கூட தோற்றமளித்தது.

ஊவ்வ்...!

ஊவ்வ்....!

மாயன் தரையைக் காலால் நிரடியபடியே பார்த்துக் கொண்டே நடந்தான். அந்த கிடாயும் கூடவே நடந்தது. நடுநடுவே அது திமிறிக் கொண்டே கட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடப் பார்த்தது.

ஒரு இடத்தில் பாம்பொன்று வளைந்து வளைந்து ஓடிய தடயம்... நடக்கும் தடத்துக்கு பக்கவாட்டு புதரில் அது உரித்துப் போட்ட சட்டை ஏதோ ஒரு பாலிதீன் காகிதம் முட்கள் இடையே சிக்கிக் கொண்டு சடசடப்பதுபோல சடசடத்துக் கொண்டிருந்தது. நல்ல தடிமனான நாகம். சட்டை முழுமையாக இருந்தது. அதை கிடாய் ஏதோ பயிர் பச்சை என்று எண்ணி வாயால் கவ்வி இழுத்துப் போட்டது. ''ஏய் ச்சீ...!'' என்று மாயன் அதன் வாயிலேயே அடிக்கவும், அந்த சட்டை கீழே விழுந்து வீசும் காற்றில் விறுவிறுவென்று உருண்டோடியது. எந்த புதர் அருகே சட்டை கிடந்ததோ அதற்குள்தான் சட்டை உரித்த பாம்பும் சுருண்டு கிடந்தது. சுருண்டு கிடந்த நிலையிலேயே அது மெல்ல தலையை மட்டும் ஒரு அங்குலத்துக்கு நிமிர்ந்து பார்த்துவிட்டு தனக்கு எதுவும் ஆபத்து இல்லை என்பதுபோல திரும்பவும் அடங்கிக் கொண்டது.

குனிந்த நிலையில் மாயன் தேடிக் கொண்டே போனான். கையில் உள்ள கோலால் - எங்காவது எதாவது மினுமினுப்பாக தெரிந்தாலே கிளறிக் கிளறி வேறு பார்த்தான். அப்போதெல்லாம் புகை போல புழுதிதான் கிளம்பியது. தப்பித்தவறி கூட பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை.

ஏழுமலைக்கும் அவன் சகாக்களுக்கும் ஓரளவு

www.cleanindians.com



தைரியம் வந்திருந்தது. அவர்களும் குனிந்த நிலையிலேயே தேடிக் கொண்டிருந்தனர். அவர்கள் மொத்தம் நான்கு பேர். ஏழுமலை, இருசன், கதிரேசன், கண்ணாயிரம். நால்வருமே வேட்டியை மடித்து கட்டிக் கொண்டனர். ஏழுமலை தான் நடந்து வந்த தடத்திலேயே பார்த்துக் கொண்டு போனான்.

''ஒரே இடத்துல தேடாம கொஞ்சம் அங்கிட்டும் இங்கிட்டுமா போய் தேடுங்கடா...''

''தேடுறோம். யாருக்கு கிடைச்சாலும் எல்லாரும் தான் பங்கு போட்டுக்கணும்.''

''அதுலையே குறியா இருக்காம முதல்ல மோதிரத்த தேடுங்க. மாயன் கைல சிக்கிடப் போகுது.''

''நான் அவனை ஒரு பார்வை பார்த்துக்கிட்டேதானே இருக்கேன். தப்பித்தவறி அவன் கைல சிக்கிட்டா போய் எதுத்தாப்புல நின்னுட மாட்டேன்?''

''அதுக்கு இப்பவே அவனைக் கூப்பிட்டு தேட்றத விட்டுட்டு போடான்னு சொல்லு...''

''அதுவும் சரிதான்... நாம பயந்த மாதிரி இங்க பெருசா எதுவும் இல்லை...'' - என்று ஏழுமலை சொல்லும் போதே விசுக்கென்று ஒரு குழி முயல் ஒரே தாவு தாவி அவர்கள் எதிரிலேயே மறைந்தும் போக - ஒரு வினாடி திம்மென்று நெஞ்சில் குத்து விழுந்தது போல இருந்தது.

''ஐயோடா...''

''டேய் பயந்தோளி... அது முயலுடா...''

- அவர்கள் பயத்தோடு பேசிக் கொண்டது தூர இருந்த மாயன் காதிலும் விழ, முதல்முறையாக திரும்பிப் பார்த்தான். அவர்களும் தெரிந்தனர். அவர்களைப் பார்க்கவும் சற்று கோபம் கூட வந்து அப்படியே நின்றான்.

''டேய் மாயன் பார்த்துட்டான்.''

''அப்ப சரி... அவனை அப்படியே ஓடிப் போயிரச் சொல்லு.''

''நீயே சொல்லுடா...''

''எலேய் மாயா... ஓடிப் போயிடு. மோதிரத்தை நீயே ஆட்டைய போடலாம்னு பாக்குறியா?''

''.......''

''என்னடா பாக்கே... நீ ஓசைப்படாம திரும்புனப்பவே நினைச்சோம்.''

''என்னா நினைச்சிங்க... பனங்காட்டை நினைச்சுப் பாக்கவே பயந்த நீங்க என்னத்தடா நினைச்சிங்க?''

கேள்வியோடு அவன் அவர்களை நெருங்கினான்.

''சரி... சத்தம் போடாதே. எல்லாரும் சேர்ந்து தேடுவோம். கொஞ்ச நேரத்துல இருட்டிடும். அதுக்குள்ள தேடிக் கண்டுபிடிச்சிட்டு இங்க இருந்து நல்லவிதமா போற வழியப் பார்ப்போம். அப்புறமா மோதிரத்தை வித்து வர்ற பணத்தை பங்கு போட்டுக்குவோம்.''

''அட போங்கடா... என் மோதிரம் எனக்கு கிடைக்கறதுக்கு நான் எதுக்குடா பங்கு தரணும்?''

''சரி ஏழுமலை. எப்ப அதை நீ தொலைச்சிட்டியோ அப்பவே அதுக்கும் உனக்கும் சம்மந்தமில்லை. யார் கைல கிடைக்குதோ அவங்களுக்குத்தான் அது...''

''டேய் வேண்டாண்டா... நல்லா இல்லைடா...''

''நீ பேசறதும் தான் நல்லா இல்ல. உனக்கு துணைக்கு வரணும்; தேடி எடுத்தும் தரணும். ஆனா நீ எங்களுக்கு எதுவும் தரமாட்டியா?''

அவர்களுக்குள் தகராறு ஆரம்பித்து விட்டது.

''போதும்... ஒத்துமையா தேட்ற வழிய பார்ப்போம். இருட்ட வேற போகுது. முதல்ல மோதிரம் கிடைக்கட்டும். அப்புறமா வெளிய போய் பேசிக்குவோம்...''

இறுதியாக ஒரு முடிவுக்கும் வந்து தனித்தனியே பிரிந்து தேட ஆரம்பித்தனர். அவர்களைப் பார்த்ததில் மாயன் தன் ஆட்டுக் கிடாயை மறந்தே போனான். சட்டென்று அதன் நினைவு வந்தவனாக ''ஐயோ என் கிடாய்...'' என்று கத்திக் கொண்டே சுற்றிலும் பார்த்தான்.

''இழுத்து பிடிச்சு வெச்சிருந்தே... பிடி தளரவும் ஓடிடிச்சாட்டம் இருக்கு.'' - என்று கதிரேசன் ஓரிடத்தில் தேடியபடியே கூறினான். அவன் அப்படி சொன்ன இடத்திற்கு அருகில்தான் தரைப்பரப்புக்கு மேல் ஒரு கை மெல்ல விரல்களை விரிக்க ஆரம்பித்திருந்தது!

www.cleanindians.com



## திக்...திக்... திக்! - 10

''அவர்கள் இருவரும் காதலர்கள்! ஆனால் அவர்கள் காதலுக்கோ பலத்த எதிர்ப்பு. எனவே ஊரை விட்டு ஓடிப்போய் பதிவுத் திருமணம் செய்து கொள்ள முயன்றனர். இருந்த போதிலும் அவர்களுக்கு சாட்சிக் கையெழுத்துப் போட ஒருவரும் முன்வரவில்லை. அவர்களுக்கும் வெறுப்பு ஏற்பட்டு இறுதியில் இருவரும் ஒரு லாட்ஜின் அறையில் பூச்சி மருந்தை குடித்து விட்டு தற்கொலைக்கு முயற்சி செய்தனர். அதிலும் கூட காதலி தான் இறந்து போனாள். காதலன் உயிர் பிழைத்து விட்டான். அவனது பெற்றோர் எப்படியோ பிழைக்க வைத்து விட்டனர். அவனும் தான் பிழைத்துக் கொண்ட பின்பு போகப் போக மனம் மாறி விட்டான். இருந்தாலும் அடுத்த வருடம் அதேநாள் அவன் விஷம் குடித்த அதே நேரத்தில் அவன் விபத்து ஒன்றில் சிக்கி உயிரை விட்டான்.

இது தற்செயலா? இல்லை... காதலியின் ஆவி செய்த செயலா?

ஆட்டை தேடிக் கொண்டு போன மாயனுக்கு மிகவே ஏமாற்றமாக இருந்தது. அங்கங்கே சில மண் மேடுகள்! அதன் மேலெல்லாம் ஏறி நின்று பார்த்தான். அப்படி அவன் பார்த்த போது அவன் கண்ட ஒரு காட்சி அவனை நிலைகுலையச் செய்தது. அவனது ஆடு தலையில்லாத முண்ட உடம்போடு ஒரு பனை மரத்தின் மேல் கிடந்தது. மேலிருந்து கீழே ரத்தம் சொட்டியபடி இருக்க, அந்த ரத்த வாடைக்கு நரிகளும் வந்து விட்டிருந்தன.

அந்த காட்சியை அவனால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. யார் ஆட்டைப் பிடித்து தூக்கி வீசியிருக்க முடியும் - அதுவும் அந்த உயரத்துக்கு...?

அவன் விக்கித்து நின்ற அந்த தருணத்தில் ஏழுமலையும் அவன் நண்பர்களும் கூட அலறுகின்ற சப்தம் கேட்டது. அவர்கள் ஒவ்வொருவர் சப்தமும் ஒவ்வொரு திசையில்

இருந்து வந்தது. தனக்கு மிக சமீபத்தில் இருந்து கேட்ட ஒரு இடத்தை நோக்கி ஓடியவன் ஓடிய வேகத்தில் அப்படியே நின்று விட்டான். அங்கே கதிரேசன் என்பவன் ஒரு பனை மரத்தடியில் வெறித்த விழிகளும் வெளிறிய முகமுமாய் பிணமாகச் சாய்ந்திருந்தான்.

மாயனுக்கு உள்ளும் புறமும் உதறலெடுக்கத் தொடங்கியது. கதிரேசன் உடம்பைத் தொட்ட நொடி அது சரிந்து விழுந்து சவமாகி விட்டதை ஊர்ஜிதம் செய்தது.

''அய்யோ...!''

மாயன் அடுத்த நொடி அங்கே நிற்க அஞ்சி அங்கிருந்து விலகி ஓடினான். வழியிலேயே ஒரு இடத்தில் இருசன்! இன்னொரு இடத்தில் கன்னாயிரம்! இன்னொரு இடத்தில் ஏழுமலை...! சொல்லி வைத்ததுபோல நால்வருமே ஒன்று போலவே செத்துப் போயிருந்தனர்.

மாயனுக்கு அப்போதுதான் தன் தப்பு புரிந்தது.

ஒரு வினாடி கூட நின்று விடக்கூடாது என்று கருதி நடக்கக் காலெடுத்தான். ஆனால் அப்படி அடி எடுத்த காலை அவன் நின்ற இடத்திற்கு கீழ் இருந்து முளைத்த கையானது இறுக்கிப் பிடித்தது. அதனால் நின்ற இடத்தில் நிலைதடுமாறி விழுந்தவன் விழுந்த வேகத்தில் திரும்பிப் பார்த்தான். அங்கே தோன்றிய கையானது அவன் பார்க்கும் போதே பூமிக்குள் திரும்ப உள்ளடங்கி விட கரெக்டாக அவன் கழுத்துக்கு இருபுறமும் இரு கரங்கள் தோன்றி அப்படியே அவன் கழுத்தை இறுக்கிப் பிடித்தன.

மிக மிக உறுதியான பிடி!

அவன் காலிரண்டும் ஒரு போராட்டத்துடன் உதறிப் பார்த்தது. சில நொடிகள் தான் அதுவும்...

பின் அதுவும் அடங்கி விட்டது!

வானில் மேற்கில் சூரியனும் இறங்கி மறைந்து விட்ட நிலையில் அந்த பனங்காடு முழுவதையும் இருள் சூழ ஆரம்பித்தது!

**ஊ**ர்க்காரியம் அவ்வளவும் முடிந்து வீட்டிற்குள் நுழைந்த பிரசிடென்ட் பஞ்சவர்ணம் முகத்தில் சொல்ல முடியாத அளவுக்கு ஒரு களைப்பு.

www.cleanindians.com



''என்னங்க... ஏன் இவ்வளவு நேரம்?'' - என்றபடியே வந்தாள் அவர் மனைவி செண்பகம்.

''என்னத்த சொல்ல செண்பகம்... அருணாசலத்தை போட்டு எரிச்சிபிட்டு கம்மாய்ல போய் ஒரு முக்கும் போட்டு முடிக்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சு.

அவனைக் கழுத்தை நெரிச்சுக் கொன்ன அவன் மாமன்காரன் தர்மலிங்கம் சத்தியமா எனக்கு எதுவும் தெரியாதுன்னு ஒரே ஒப்பாரி. 'அவனை போலீஸ்ல ஒப்படைக்கணும்'னு ஒரு கூட்டம். 'இல்லையில்ல அவன் பாவம்'னு ஒரு கூட்டம். யார் பேச்சை கேக்கறதுன்னே எனக்குத் தெரியல...''

''பிறகு என்னதான் பண்ணீங்க?''

''என்னத்த பண்ண? நாளைக்கு நம்பூதிரி வரட்டும். அவர் சொல்றத வெச்சு முடிவு பண்ணலாம்னு சொல்லிட்டு வந்துட்டேன்...''

''அதுவும் சரிதான்... கைக்கு மீறி எல்லா விஷயங்களும் போய்க்கிட்டிருக்கும் போது வேற என்னத்த பண்றது?''

செண்பகமும் அவருக்கு ஆதரவாகத்தான் பேசினாள்.

உள்ளே அறைக்குள் இருந்து ரஞ்சிதம் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவள் நினைப்பெல்லாம் முந்தைய இரவு வந்து விட்டுப் போன ஞானசேகரன் மேலேயேதான் இருந்தது.

செண்பகமும் பஞ்சவர்ணத்திடம் ஞானசேகரன் பற்றித்தான் பேச ஆரம்பமானாள்.

பஞ்சவர்ணமும் கால் கை கழுவிவிட்டு வந்தார். ஊஞ்சல் பலகையில் அமர்ந்து கொண்டு புசுபுசுவென்று முடி முளைத்த அவர் மார்பின் ஈரத்தை துடைத்துக் கொண்டே செண்பகம் பேச்சை கேட்க தொடங்கினார்.

''உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லுவேன். வாயைப் பொளந்திரக் கூடாது...''

''இன்னிக்கு எல்லாமே வாயப் பொளக்க வைக்கற சமாச்சாரமாத்தான் இருக்குது. இதுல நீயும் சேர்ந்துக்கிறியாக்கும்?''

''அதெல்லாம் ஊர் விஷயம். இது நம்ம குடும்ப விஷயம்...''

''சரி, சரி... ஜிலேபி சுத்தாம விஷயத்துக்கு வா...''

''நம்ம மாப்ள தம்பி இன்னும் மிலிட்ரில போய் சேரலை போலருக்கு...''

''என்ன புள்ள உளறுறே?''

''உளறலை. நேத்து ராத்திரிபூரா நம்ம ஊட்டையே சுத்திச் சுத்தி வந்துருக்காரு.''

''ஏ புள்ள... நீ என்ன புதுசா கதை உட்டுகிட்டு...?''

''கதையும் இல்ல கற்பனையும் இல்ல... நம்ம பொண்ணு மேல அம்புட்டு மோகம்...''

''அடக் கொடுமையே... அப்ப் நான் இல்லாதப்ப வீட்டுக்கு வந்தாராக்கும். ஊருக்குள்ள மிலிட்டரி ஜீப் வந்த மாதிரியே தெரியலியே...''

''வீட்டுக்கெல்லாம் வரலை. பொழுது விடியவும் இளம்பிப் போயிட்டாருன்னுதான் தோணுது.''

''என்ன புள்ள நீ... மாப்ளை கோவிச்சுக்கிட்டு கிவிச்சுக்கிட்டு போயிருக்கப் போறாரு...''

''எனக்கும் அப்படித்தான் தோணுது. உங்க பொண்ணு ஒரு கிறுக்கு. அவர் வரவும் நம்மை எழுப்பாம... கேட்டா அவர்தான் எழுப்ப வேண்டாம்னு சொன்னாராம்...''

பஞ்சவர்ணம் உடனே ரஞ்சிதத்தை பார்க்க, ரஞ்சிதம் பதிலுக்கு அப்பாவை ஒருவித வெட்கமும் ஏமாற்றமும் நெளிய பார்த்தாள்.

''என்ன கண்ணு நீ இப்படி பண்ணிப்பிட்டே...''

''இல்லப்பா... அவர்தான்...''

''ஹூம்... அப்ப ஊர்லதான் இருக்காரா மனுசன்...''

''அனேகமா பக்கத்துல மதுரை மிலிட்டரி ஆபீஸ்லதான் இருக்கணும். போனவட்டம் வந்தப்ப அந்த ஆபீஸ் ஜீப்புல தானே வந்தாரு?''

''ஆமாமாம்... என்ன இருந்தாலும் மேஜர் இல்லையா?''

- பஞ்சவர்ணம் கொஞ்சம் பெருமைப்பட்டுக் கொள்ள - வாசற்புறம் கச்சிதமாக நிழலாடியது.

''யாரு?''

''நான் தான் சுப்பையா நாடார் வந்துருக்கேன் பஞ்சவர்ணம்.''

''ஓ நாடார் அண்ணனா... வாங்க... வாங்க...''

''என்னா பஞ்சவர்ணம் ஊர்க் குழப்பமெல்லாம் ஒரு வழியா அடங்குனிச்சா?''



''உக்காருங்கண்ணே... அது இப்போதைக்கு அடங்கற மாதிரியே எனக்குத் தெரியல... ஆமாம் நீங்க எங்க இவ்வளவு தூரம்... அதுவும் இந்த நேரத்துல...?''

''நானும் சில முக்கியமான விஷயங்கள பேசிட்டுப் போகலாம்னு தான் வந்தேன்.''

''சொல்லுங்க... என்ன விஷயம்?''

- பஞ்சவர்ணம் கேட்க சுப்பையா நாடார் நிமிர்ந்து ரஞ்சிதத்தையும், செண்பகத்தையும் ஒரு பார்வை பார்த்தார்.

''என்ன... இவங்க இருக்கறது உங்களுக்கு இடைஞ்சலா இருக்கா?''

''அப்படி இல்ல... இது ஒரு மாதிரி விஷயம். நீங்க கொஞ்சம் வெளிய வந்தா பொடி நடையா நடந்துகிட்டே பேசிடலாம்.''

''அப்படியா... இல்லாட்டி நாளைக்கு காலைல பஞ்சாயத்து போர்டு ஆபீஸ்ல வெச்சுக்கலாமா?''

''இல்ல பஞ்சவர்ணம். இது ரொம்ப அவசரம். என்னால மனசுல வெச்சு சுமக்க முடியல. சொல்ல வேண்டியதை சொன்னாத்தான் எனக்கு தூக்கமே வரும்...''

''அப்ப சரி... இருங்க வந்துட்றேன்...''

பஞ்சவர்ணம் எழுந்து ஆணிக்காதில் அவிழ்த்து மாட்டிய சட்டையை திரும்ப போட்டுக் கொண்டு நாடாருடன் புறப்படத் தயாரானார். செண்பகம் கணவனை ஏமாற்றமுடன் பார்த்தாள். காலையில் போனவர் இரவு வந்து சாப்பிடக்கூட இல்லை. அதற்குள் அவரை இப்படி ஒருவர் வெளியே அழைத்தால் கோபமும் சலிப்பும் வருவது சகஜம்தானே?

இருவரும் வீதிக்குள் இறங்கி விட்டனர்.

செண்பகம் ரஞ்சிதத்தைப் பார்த்து ''ஹூம்... நல்ல பிரசிடெண்ட்டுடி உங்கப்பா... வர்றவங்களுக்கும் கொஞ்சம் கூட மனசாட்சியே இல்ல. ஏன் காலைல பேசிக்க முடியாதபடி அப்படி என்ன தலைபோற விஷயம் அது? பேசி முடிச்சாத்தான் இவருக்கு தூக்கம் வருமாம்... இவரு தூங்கணும். ஆனா உங்கப்பா சுமந்து சாகணுமாக்கும். என்னவோ போ...'' - அலுத்துக் கொண்டே பேசியவள் வாயில் அப்போதே கொட்டாவி பிரிந்தது.

www.cleanindians.com

''சரிம்மா நீ படுத்துக்க. நான் முழிச்சிருந்து அப்பா வரவும் சோறு போடுறேன்.'' - என்றாள் ரஞ்சிதம்.

''நானே சொல்லணும்னு இருந்தேன். இன்னிக்கு பூரா நெல்லவிச்சே நான் நொந்து போயிட்டேன்.'' - என்று திரும்பவும் கொட்டாவி பிரிய உள்ளே போய் அப்படியே கட்டிலில் விழுந்தாள்.

ரஞ்சிதத்துக்கும் அம்மாவைப் பார்க்க பாவமாக இருந்தது.

பஞ்சவர்ணம் வர நேரமாகும் என்றும் தோன்றியது.

அதுவரையில் முழித்திருப்பதற்கு டி.வி. பார்க்கலாம் என்று நினைத்து டி.வி.யை போட்டுவிட்டு காற்றோட்டமாக ஜன்னலருகே போய் நாற்காலியைப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள். அவள் பார்வை டி.வி. மேலேயே இருந்தது. ஆனால் ஜன்னலுக்கு அந்த பக்கமாய் ஞானசேகரன்!

அவன் பார்வையோ அவள் மேலேயே.....

## திக்...திக்... திக்!- 11

'அது ஒரு அற்புதமான மலை வாசஸ்தலம்! அங்கே அங்குல நிலம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. உலகம் முழுவதுமாய் உள்ள மக்கள் ஆசையாய் வந்துவிட்டுச் செல்லும் ஒரு கோடை வாசஸ்தலம் அது. கோடை காலத்தில் அந்த மலையில் ஒரு லாட்ஜில் ஒரு நாள் வாடகையே ஐந்தாயிரமெல்லாம் போகும்...

பல பணக்காரர்களுக்கும் அந்த மலையில் எஸ்டேட்டும் வீடும் உள்ளது. பல புதிய பணக்காரர்கள் அந்த மலையில் இடம் வாங்கவும் மாளிகை கட்டவும் தயாராக இருக்கின்றனர். ஆனால் இடம் கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாக உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அந்த மலையில் ஒரு பங்களா யாரும் வாங்குவாரற்று கிடக்கிறது!

அதை இலவசமாக ஒரு அநாதை விடுதிக்கு கொடுத்தும் அவர்கள் அதைப் பயன்படுத்தத்

www.cleanindians.com



தயாரில்லை. காரணம் - அந்த மாளிகைக்குள் சில வருடங்களுக்கு முன் நடந்த கோரமான ஒரு தீவிபத்தும் அதில் அந்த குடும்பத்தைச் சேர்ந்த அவ்வளவு பேரும் ஒரு சேர கருகி இறந்ததும் தான்.

அவர்கள் இறந்தால் என்ன? காலம் எல்லாவற்றையும் மறக்கச் செய்து மாற்றி விடக் கூடியதுதான் என்ற போதிலும் அந்த மாளிகைக்கு விடிவு வரவில்லை. ஒரு தைரியமான நபர் அதை வாங்க முன்வந்து பரிசோதனை நிமித்தம் ஒரு இரவு அங்கேயே தங்கவும் செய்தார். ஆனால் அவர் அதன்பின் வெளியே வரவே இல்லை.

உண்மையில் அதன் மர்மம் இன்றளவும் விளங்கவில்லை. உலகம் முழுக்க இப்படி புதிரான கட்டிடங்கள் பல உள்ளன!

இரவு நேரம்!

சிலுசிலுவென்ற காற்று.

பஞ்சாயத்துபோர்டு மூலம் போடப்பட்ட தெரு விளக்குகளும் ஒன்றுகூட பழுது படாமல் எரிந்து கொண்டிருக்க, தெருவில் மௌனமாக நடந்தபடி இருந்தார் பஞ்சவர்ணம். கூடவே சுப்பையா நாடார்.

நாடார் இன்னும் பேச்சை ஆரம்பிக்கவேயில்லை. பஞ்சவர்ணமும் அவர் மிகுந்த மனசு அழுத்தத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டதால் அவரைத் தூண்டவில்லை.

நல்லவேளை... சுப்பையா நாடாரே மெல்ல வாயைத் திறந்து விட்டார்.

''பஞ்சவர்ணம்! இப்போ நான் சொல்லப் போற விசயம் உனக்கு ரொம்பவே அதிர்ச்சியா இருக்கும். அதுக்காக என்னால் சொல்லாமலும் இருக்க முடியாது.''

''எதுவா இருந்தாலும் சொல்லுங்கண்ணே.''

''நான் சொல்லப் போற விசயத்துக்கும் உன் குடும்பத்துக்கும் சம்மந்தம் இருக்கு.''

''சரி... என்னன்னு சொல்லுங்க...''

''உன் குடும்பத்துக்கு மட்டுமில்ல - இன்னிக்கு ஊருக்குள்ள நடந்த அவ்வளவு கெட்ட சாவுக்கும் கூட சம்மந்தமிருக்கு.''

''பீடிகை போதும்ணே... தயவு செய்து

விசயத்துக்கு வாங்க.''

''பஞ்சவர்ணம்... என்னை முதல்ல மன்னிச்சுக்க. நீ உன் மகளுக்கு பார்த்துருக்கற உன் மாப்ளை நல்லவன் இல்ல.''

-பஞ்சவர்ணம் அதிர்ச்சியோடு பார்த்தார்.

''அதே சமயம் அந்த மாப்ளை இப்ப உயிரோடையும் இல்லை.... மாப்ளை-மட்டுமில்ல. மாப்ளையோட வந்த மூணு மிலிட்டரி சினேகிதங்களும் தான்.''

- சுப்பையா பிள்ளை அடுத்தடுத்து சொன்னதெல்லாம் பஞ்சவர்ணத்தை உலுக்கி எடுத்துவிட்டது.

''சுப்பையாண்ணே! நீங்க நிசமாதான் சொல்றீங்களா இல்ல என்னை சும்மா தட்டிப் பாக்கறீங்களா?'' - அவர் பதில் குரலில் நடுக்கம் தெரிந்தது.

''உன்னை நான் எதுக்கு பஞ்சவர்ணம் தட்டணும். ஒரு பெரிய கொடுமை நடந்து அதனால் அஞ்சாறு பலிகளும் நடந்து முடிஞ்சிடிச்சு''

''அண்ணே... என்னண்ணே சொல்றீங்க? என் நெஞ்சையே அடைக்குது உங்க பேச்சு.''

''விபரமாவே சொல்றேன். ரெண்டு நாமுந்தி என் பொண்ணு மல்லிகா டைப்ரைட்டிங் பரீட்சை எழுத மதுரைக்கு போயிருக்கா. பரீட்சை எழுதி முடிச்சிட்டு அவ ஒரு அஞ்சு மணியப்போல பஸ்ல வந்து நம்ப புளிய மரத்தடி ஸ்டாப்ல இறங்கிபனங்காடு வழியா, நடந்து வந்துருக்கா, அப்ப சைக்கிள் கடை காளிமுத்துவும், அந்த அருணாசலமும் கூட வந்துருக்காங்க. மூணுபேரும் ஒரே ஊரு ஒரே தெருவுங்கறதால விரசமில்லாம வெகுளித்தனமா பேசிக்கிட்டு வந்துட்டிருக்கும் போது பனங்காட்டுல உன் மாப்ளையோட மிலிட்டரி ஜீப்பும் அதுல அவரோட சினேகிதங்க மூணுபேரும் மிலிட்டரி சரக்கை போட்டுட்டு நல்ல மப்புல இருந்துருக்காங்க.

அதுல ஒருத்தன் என் பொண்ணு மல்லிகாவை பார்த்துட்டு துப்பாக்கிய காட்டி அவளை மிரட்டி அப்படியே கற்பழிக்கவும் பாத்துருக்கான். காளிமுத்துவும், அருணாசலமும் அவங்க துப்பாக்கிய காட்டவும் பயந்துட்டாங்க.



இருந்தாலும் அங்க கை கலப்பு நடந்துருக்கு. அதுல என் மக கைக்கு எப்படியோ ஒரு துப்பாக்கி கிடைக்கவும் அவ தன் மானத்தை காப்பாத்திக்க வும், காளிமுத்துவையும், அருணாசலத்தையும் காப்பாத்தவும் அந்த துப்பாக்கியால அவங்க நாலு பேரையுமே மாறிமாறி சுட்டுருக்கா. அவங்களும் அப்படியே ரத்த வெள்ளத்துல சரிஞ்சிட்டாங்க.

கொஞ்ச நேரம் கழிச்சுதான் என் மகளுக்கு தான் என்ன செஞ்சோங்கறதே தெரிய வந்துருக்குது.. கூட இருந்த காளிமுத்துவும், அருணாசலமும் என் மகளை தேத்தி அவ கை துப்பாக்கியை பிடுங்கி அங்கேயே பனங்காட்டுக்குள்ள புதைச்சுட்டாங்க. அப்படியே அந்த நாலு பேரையும் இழுத்து போட்டு புதைக்க குழியை தோண்டியிருக்காங்க. அதுக்குள்ள அந்த பக்கமா சில ஊர்க்காரங்க வரவும் வேற வழியில்லாம மேலாக அவங்களை போட்டு மூடிட்டு அன்னிக்கு பொழுதுக்கு கிளம்பிட்டாங்க.

சந்தடியெல்லாம் அடங்கின பிறகு திரும்பவந்து உடம்பை கொளுத்திப் பிடுவோம்னு தீர்மானம் பண்ணவங்க அந்த மிலிட்டரி ஜீப்பையும் நம்ம தாழங்குட்டைக்குள்ள தள்ளி விட்டுட்டாங்க. அது குட்டை சேத்துக்குள்ள புதைஞ்சு அப்படியே மூழ்கிப் போச்சு.

அப்பால இவுகளும் ஒண்ணும் தெரியாதவங்க மாதிரி ஊருக்குள்ள வந்துட்டாங்க. ஆனா காத்தாயி பனங்காட்டுல பேயைப் பாத்ததா கூறவும் விவகாரம் தொடங்கிடிச்சு. தான் புதைச்ச பொணத்தை பார்த்துட்டுதான் காத்தாயி பேயிங் கறாளோன்னு காளிமுத்துவுக்குள்ள ஒரு குழப்பம். அதனாலதான் அவன் அடிச்சி பிடிச்சிகிட்டு போனான். போனவன் கடைசில திரும்பலை. மறுநாள் காலையில அருணாசலமும் போய் சேர்ந்துட்டான்.

ரெண்டு பேர் தான் அவ வரைல பாதுகாப்பா இருந்தவங்க. அவங்க இரண்டு பேருமே செத்துப் போகவும் என் மகளுக்கும் பயம் வந்துடிச்சி. ரெண்டு நாளாவே கிணறிக்கிட்டிருந்தவ அருணா சலமும் செத்துட்டான்னு தெரிஞ்ச உடனேயே என்கிட்ட நடந்த அவ்வளவையும் சொல்லிட்டா.

அதை எல்லாம் கேட்ட பிறகு என் மனநிலை எப்படி இருக்கும்னு நான் சொன்னாத்தான் உனக்கு

www.cleanindians.com

விளங்குமா?''

- சுப்பையாநாடார் ஓரளவு சுருக்கமாகவே நடந்ததை கூறி நிறுத்திவிட்டார். ஆனால் பஞ்சவர்ணத்துக்குதான் நெஞ்சு துடித்தது. அதே சமயம் நேற்றைய இரவில் ஞானசேகரன் தன் விட்டையே சுற்றிச் சுற்றி வந்ததா அவர் மனைவியும், மகளும் கூறியதும் நினைவுக்கு வரவும் பகீர் என்றது.

''என்ன பஞ்சவர்ணம். நான் சொன்னதை நம்ப முடியலயா?''

''இல்லண்ணே... நீங்க சொல்லவும் நான் மேற்கொண்டு நடந்த சில விஷயங்களோட கோர்த்துப் பார்த்தேன்.''

''நல்லா பாரு... இப்படி ஒரு நிலைல நான் இனி அடுத்து என்ன பண்றதுன்னும் எனக்குத் தெரியல. இதை மூடி விழுங்கி ஜீரணிக்கவும் எனக்கு தெம்பில்லை. ஏன்னா நான் மூடி மறைச்சாலும் அடுத்தடுத்து சிலர் சாகும்போது எப்படியும் விஷயம் வெளிய தெரியவந்துடும். அதனாலதான் விஷயத்தை நானே சொல்லிட்றதுன்னு முன் வந்தேன்.'' சுப்பையா நாடார் திக்கித் திணறி நடந்த அவ்வளவையும் கூறி முடிக்க பஞ்சவர்ணத்துக்கு நிஜமாலுமே நெஞ்சுவலி வந்துவிட்டது. அப்படியே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாலையிலேயே உட்கார்ந்து விட்டார். சுப்பையா நாடாரும் அவர் அருகில் அமைதியாக நின்று வானத்தை பார்த்தார். நட்சத்திர வானம் எப்போதும் போல வெகு அழகாகவே இருந்தது. ஆனால் ரசிக்கக் கூடிய மனநிலைதான் இல்லை. ஊரைச் சுற்றிவேறு இனம் புரியாத பயங்கரம். எல்லாமே விடியும் போது ஒவ்வொன்றாக தெரிய வரலாம். இருந்தும் அந்த வேளையில் பஞ்சவர்ணத்துக்குள் திடும்மென்று ஒரு தாக்கம்.

அவர் மனைவி செண்பகம் முந்தின இரவில் ஞானசேகரன் வீட்டைச் சுற்றி வந்ததாகக் கூறியது சட்டென்று நினைவுக்குள் முட்டிற்று. அந்த நொடியே அப்படி வந்தது அவன் ஆத்மா தான் என்பது அவருக்கு ருசுவாகிவிட்டது. நல்ல வேளை... ரஞ்சிதம் அவன் கூப்பிட்டான் என்று போகவில்லை. போயிருந்தால் என்னாகியிருக்கும் என்கிற கேள்வியும் அவரைக் கிள்ளியதில் துள்ளிக்

www.cleanindians.com



கொண்டு எழுந்தார். அவர் எழுந்த வேகம் சுப்பையா நாடாரையே ஒரு அரட்டு அரட்டியது.

''என்ன பஞ்சவர்ணம்... உனக்குள்ள ஒரு புது வேகத்தை பார்க்கறேனே....''

''ஆமாம் நாடாரே... நீங்க சொன்னதெல்லாம் நிசம்தான்கற மாதிரி நேத்து ராத்திரியே என் மருமகனாகப் போற ஞானசேகரன் ஆவி வீட்டை சுத்தி வந்திருக்கு. நல்ல வேளை என் மக அது பின்னாடி போவலை...''

''அப்படியா?''

''ஆமாம்... காளிமுத்து, அருணாசலம்னு அது நல்லாவே பழிவாங்கிறிச்சு. இது புரியாம முனுசாமி மேல் நானும் சந்தேகப்படத் தெரிஞ்சேன்.''

''அதைத் தான் நானும் சொல்ல வந்தேன். இப்ப என் மவ பயந்து நடுங்கிக்கிட்டு இருக்கா. எங்க தன்னையும் அந்த ஆவிங்க எதுனா பண்ணிட்டா என்ன பண்ணுறதுன்னு ஒரே பயத்துல என் வீடே உறைஞ்சு போய் கிடக்கு. ஒரு பக்கம் ஆவி பயம். இன்னொ பக்கம் இப்படி ஒரு கொலைக்கு நாலு கொலையை அதுவும் மிலிட்டரி காரங்களையா. கொன்னும்படியாயிடிச்சேன்னு சட்ட பயம் வேற... நானும் என் குடும்பமும் அடுத்து என்ன ஆகும் ஏது ஆகும்கறது தெரியாம நடுங்கிக்கிடக்கோம்.''

''கவலைப்படாதீக... இது நம்ப ஊரு விசயம். இந்த நொடி போலீசு அப்படி இப்படின்னு நாம போவலை. அருணாசலம் கழுத்தை நெரிச்சு தண்ணில அமுக்கிக் கொன்ன தர்மலிங்கமும் போலீசு பிடிச்சிட்டா என்ன பண்றதுங்கற பயத்துல தான் இருக்காரு... பொழுதுவிடியட்டும். நாளைக்கு நம்ம துணைத் தலைவர் சண்முகம் கேரளத்து மாந்திரீகனோட , வந்துடுவார். மாந்திரீகன், அலையற இந்த ஆவிங்களை நிச்சயம் அடக்கிப் பிடிச்சிடுவார். அதோட விசயத்தையும் கமுக்மா அமுக்கி மூடிடுவோம்.

நீரும் உம்ம பொண்ணும் தைரியமா இருங்க. எனக்கு தெரிஞ்ச இந்த விசயம் வேற யாருக்கும் தெரிய வேண்டாம்.

எனக்கு இப்ப ஒரே ஆறுதல் என் மக எப்படியோ தப்பிச்சாளே... அது தான்!''

பஞ்சவர்ணம் இழுத்து மூச்சு விட்டார். அப்படியே துண்டை உதறி தோளில் போட்டுக்

கொண்டு வீடு நோக்கி நடக்கத் தொடங்கி விட்டார்.

ஆனால்....!

## திக்...திக்... திக்! - 12

ஜில்லென்ற அந்த கோடைவாசஸ்தல மலை வீட்டில் குடும்பமே ஒரு இரவில் தற்கொலை செய்து கொண்ட தால் அந்த வீட்டு மதிப்பே ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. பேயாவது பிசாசாவது என்று கருதுபவர்கள் இப்படிப்பட்ட வீடுகளை வாங்கி அதை பலர் வந்து தங்கிச் செல்லும் லாட்ஜ் ஆக மாற்றி அதன் மூலமும் நாலு காசு பாக்க ஆசைப்படுவார்கள். அப்படித்தான் ஒருவர் அந்த வீட்டை லாட்ஜ் ஆக்க ஆசைப்பட்டு மராமத்து வேலைகளில் இறங்கினார். ஆனால் மராமத்து வேலையின் போதே சாரத்தின் மேல் இருந்து ஒருவன் கீழே விழுந்து செத்துப் போனான். கதை வெளியே தெரியாதபடி அப்படியே அமுக்கி விட்டு வெளியூர்களில் இருந்து ஆட்களை அழைத்து வந்து அந்த வீட்டை லாட்ஜ் ஆக மாற்றி முடித்தார். திறப்பு விழாவும் செய்தவர் திறப்பு விழா அன்றே லாட்ஜில் பாத்ரூம் போன இடத்தில் ஹார்ட் அட்டாக்கில் உயிரை விட்டுவிட்டார்.

இவ்வளவு போதாதா?

அந்த வீடு லாட்ஜ் ஆகி இப்போது மூடிய நிலையில் தூசும் தும்புமாகக் கிடக்கிறது. தலை மறைவு வாழ்க்கை வாழ்பவர்கள் கூட அங்கே கால் வைக்க அஞ்சுகின்றனர்.

எல்லாம் இயல்பாக நடக்கும் விஷயம் தானா? இல்லை... அந்த இடத்தில் நல்ல விதமாய் யாராலுமே வாழ முடியாதா? அதுவும் இல்லை... அங்கே அகால மரணமடைந்தவர்கள் அங்கு வருபவர்களையும் அகாலமாக்குகிறார்களா?

எல்லாமே விடைதெரியாத வினாக்கள்!

www.cleanindians.com

இரவு நேரம்!

சாப்பிட வேண்டிய மனிதரை நாடார் அழைத்துச்



சென்ற கோபத்தில் இருந்தாள் செண்பகம். சமைத்த சோறு ஆறிக் கொண்டிருந்தது... ரஞ்சிதமோ மன அழுத்தத்தில் தூங்கியே போய்விட்டாள். ஒருவழியாக பஞ்சவர்ணம் வந்து சேர்ந்தார். கணவரைப் பார்க்கவும் தான் அவளுக்கு உயிரே வந்தது. வந்தவர் பார்வை முதலில் ரஞ்சிதத்தைத் தான் தேடியது. நல்லவேளை ரஞ்சிதம் தூங்கி விட்டிருந்தாள். அவருக்கும் அப்பாடா என்றிருந்தது!

''என்னங்க...! எதுக்கு ரஞ்சிதத்தைப் பார்த்து பெருமூச்சு விடுறீங்க?''

''என்ன சொல்ல செண்பகம்... எல்லாம் நம்ம தலை எழுத்து.''

''என்னங்க! நாடார் அப்படி என்னத்த சொன்னார்?''

''நல்லவேளை... மனுஷன் இப்பவாவது வந்து சொன்னார். இல்லாட்டி என்னென்னவோ நடந்து நம்ம மவளே நமக்கு இல்லாம போயிருப்பா...''

''ஐயோ... என்னென்னமோ சொல்றீங்களே... அப்படி என்னதாங்க நடந்திச்சு?''

''சொல்றேன்... அதுக்கு முந்தி ஒரு நிமிசம் இரு...'' என்று உள்ளே சென்றவர் முனுசாமி கோவில் விபூதியை மாடத்தில் இருந்து எடுத்து நெற்றியில் பரபரவென்று தேய்த்துக் கொண்டார். ஒரு சிட்டிகையை செண்பகத்துக்கும் பூசிவிட்டார்.

பின் விபூதி சம்புடமுடன் வீட்டைச் சுற்றிவந்து அங்கங்கே விபூதியை தூவினார். செண்பகத்துக்கு அவரது செயல் கிலியை மூட்டிற்று. இறுதியாக வீட்டுக்குள் நுழைந்தவர் முதல் காரியமாக ரஞ்சிதம் படுத்திருக்கும் அறை ஜன்னலை மூடி அதன் அருகே ஒரு பழைய செருப்பைக் கொண்டுவந்து போட்டார். அப்படியே தூங்கிக் கொண்டிருந்த ரஞ்சிதத்தின் நெற்றியிலும் ஒரு சிட்டிகை விபூதியை வைத்தவர் அவள் தூக்கம் கலைந்துவிடாதபடி நைசாக நழுவி அறையை விட்டு வந்தார். பின் செண்பகத்தை கூட்டிக் கொண்டு சமையல் கட்டுப்பக்கம் போய் சுப்பையா நாடார் சொன்ன

அவ்வளவையும் கூறத் தொடங்கினார். அதேசமயம் ரஞ்சிதம் தூங்கும் அறைக்குள் பஞ்சவர்ணம் சாத்திய ஜன்னல் தானாகத் திறந்து கொள்ள - திறந்து கொண்ட ஜன்னல் கம்பிகளுக்கப்பால் வெறித்த விழிகளுடன் ஞானசேகரன்! அவன் பார்வை உள்ளே தூங்கிக் கொண்டிருக்கும் ரஞ்சிதத்தின் மேலேயே இருந்தது. சில நொடிகள்தான் வெறித்திருப்பான். பின் ஒரு சிறு கல்லை எடுத்து அவள் மேல் போட முதல் கல்லுக்கு அவளிடம் எந்த ரீ - ஆக்ஷனும் இல்லை. இரண்டாவது கல்லுக்கு கண்விழித்தவள் ஞானசேகரனைப் பார்த்து விக்கித்து போனாள்.

''மாமா...''

''வா இங்க...''

''என்ன கூத்து இது. ராத்திரில ராத்திரில வந்துகிட்டு?''

''கிட்டவா சொல்றேன்...''

''என்ன மாமா இது சோதனை...'' - அவள் எழுந்து ஜன்னல் அருகே சென்றாள். அவன் உற்றுப்பார்த்தான்.

''அப்படி பாக்காதீங்க மாமா... ஆமா ஏன் வீட்டுக்குள்ள வர மாட்டேங்கறீங்க...?''

''சொல்றேன்... நீ முதல்ல வெளியவா.''

''ஐயோ மாட்டேன்... அப்பா அம்மாக்கு தெரிஞ்சா அவ்வளவுதான்.''

''தெரியாம வாடா என் செல்லம்.''

''மாமா...''

''வாடான்னா...''

''மாமா என்ன இது... ஏன் உள்ள வரமாட்டேங்கறீங்க?''

''காரணம் இருக்கு. அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்.''

''என்ன காரணம்?''

''இப்படி நின்னுகிட்டெல்லாம் சொல்ல முடியாது. நீ தலையணையை போட்டு போர்வையால மூடிட்டு நைஸா கிளம்பிவா. உனக்கு நான் நெக்லஸ் எல்லாம் கொண்டு

www.cleanindians.com



வந்திருக்கேன்.''

- அவன் நெக்லஸ் என்று சொன்னதோடு அதை எடுத்தும் காட்டினான். லேசான அந்த இரவிலும் அது மின்னியது. ரஞ்சிதமும் அவன் சொன்னது போலவே நடந்து கொள்ளத் தொடங்கினாள்!

பஞ்சவர்ணம் எல்லாவற்றையும் கூறி முடித்திருக்க, செண்பகம் கலங்கி விட்டிருந்தாள். கண்களில் கண்ணீர் சரசரவென்று உருண்டு ஓடிய படி இருந்தது.

''ஏன் செண்பகம் அழுவறே... நாம தப்பிச்சிட்டோம். அந்த நாயோட நம்ம மவளுக்கு கல்யாணம் ஆகியிருந்தா என்னாகியிருக்கும். யோசிச்சு பார்...''

''அது சரிங்க. நிச்சயம் பண்ணது நின்னு போனா அது கூட கெட்டது தானே... ராசியில்லாதவன்னு சொல்ல ஆரம்பிச்சிடு வாங்களே...''

''தப்பு... நல்ல அதிர்ஷ்ட சாலி. அதான் ஒரு பொம்பள பொறுக்கி கிட்ட மாட்டாம தப்பிச்சான்னு தான் நினைப்பாங்க...''

''என்னால இப்ப கூட நம்ப முடியில. ஞானசேகரன் அவ்வளவு மோசமானவனா?''

''மிலிட்டரி வாழ்க்கை சிலரை ஒழுக்கமுள்ள வங்களா ஆக்கும். சிலரை மிருகமாவும் மாத்திடும். இவன் ரெண்டாவது ரகத்துல சேர்ந்துட்டான். அதுக்கு நாம என்ன பண்ண முடியும் சொல்லு பார்ப்போம்.''

- பேச்சோடு பேச்சாக அங்கேயே சாப்பிட்டு முடித்தார்.

''அப்புறம் ஒரு முக்கியமான விசயம்... இந்த விசயம் யாருக்கும் தெரியக் கூடாது. தெரிஞ்சா ஒரு பொண்ணுக்கு ரெண்டு பொண்ணுங்க வாழ்க்கை பாதிக்கப்படும்...''

''ஐயோ நான் ஏங்க வாயைத் திறக்கறேன்.''

''இப்படி சொல்லிகிட்டே மனசு கேக்காம பேசற ஜென்மம் தானே பொட்ட ஜென்மம்.''

''ஆமா உங்க ஆம்பள ஜென்மம் ரொம்ப

யோக்யம், பாருங்க இப்ப... சிலர் செஞ்ச தப்பால ஒரு ஊரேல்ல பாதிக்கப் பட்டிருக்கு...''

''சரி நமக்குள்ள எதுக்கு சகடை! விட்டுத்தள்ளு... இன்னிக்கு ராத்திரிய எப்படியாவது கழிப்போம். விடிஞ்சா நம்பூதிரி வந்துடுவார். அவர் வந்த பின்னால ஒரு கஷ்டமும் இல்லை...''

''உசுர் போன குடும்பங்களுக்கு என்ன சமாதானம் சொல்வீங்க...''

''அதான் நம்பூதிரி ஆவிகளை மடக்கி பிடிப்பாருல்ல. அவர் சொல்லிடுவாரு... ஆவி பழிவாங்கினதுக்கு யார் என்ன செய்ய முடியும்?''

பேச்சோடு பேச்சாக ஹால்பக்கம் வந்த பஞ்சவர்ணம் அறைக் கதவைத் திறந்து ரஞ்சிதம் தூங்குகிறாளா என்று பார்த்தார். போர்த்தியபடி இருப்பதை பார்த்தவர்,

''நல்லா அசந்து தூங்கறா... நல்லது தூங்கட்டும்'' என்று கதவை சாத்திக் கொண்டார். அப்படியே கை எடுத்து ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு தரையில் படுக்கை விரித்து உடம்பை கிடத்தினார். பக்கத்திலேயே செண்பகலம் வந்து படுத்தாள். அதற்கு முன் விளக்கை அணைக்க போனவளை தடுத்துவிட்டார். மிகமிக எச்சரிக்கையோடு இருப்பதாக ஒரு நினைப்பு. ஆனால் பாவம்... ரஞ்சிதம் உள்ளே இல்லாத உண்மை மட்டும் அவருக்கு தெரியவேயில்லை!

விடிந்துவிட்டது!

தாழங்குட்டை பக்கமாய் காலைக் கடன் முடிக்கப் போனவர்கள் அவ்வளவு பேரும் நூத்தி எட்டாம் பனங்காட்டுக்கு மேல் ஏராளமான கழுகுகள் பறப்பதைப் பார்த்து அதிர்ந்து போயினர். அப்படி ஒரு காட்சியை அவர்கள் வ்ாழ்நாளில் பார்த்ததே இல்லை. அந்த காட்சியே காட்டுக்குள் திரும்பவும் ஒரு விபரீதம் நடந்து விட்டதை அவர்களுக்கு உணர்த்திவிட்டது.

செய்தி பஞ்சவர்ணம் காதுக்கும் வந்தது.

www.cleanindians.com



அவ்போது கொல்லையில் பல் விளக்கிக் கொண்டிருந்தார். செய்தியை கேள்விப் பட்டவர் அப்படியே மார்பில் ஒரு துண்டோடு தாழங்குட்டை பக்கம் வந்து விட்டார். அவரும் பார்த்தார். கிட்டத் தட்ட ஐம்பது அறுவது கழுகுகள்! பகீரென்றது!

ஏதோ விபரீதம் என்கிற அதே உணர்வோடு வீட்டுக்கு திரும்பியவரை மேலும் பயமுறுத்தி னாள் செண்பகம் ''என்னங்க...நம்ம ரஞ்சிதத்தைக் காணோங்க. அவ படுக்கைல தலகாணிதான் இருக்குது. சாதுர்யமா அதுக்கு போர்வையை போட்டு மூடிட்டு ராத்திரியே அவ போயிட் டாங்க...''

- பஞ்சவர்ணம் அடுத்த க்ஷணமே தலை மேல் ஒரு பாறை தவறுதலாக விழுந்து விட்டது போல அப்படியே உட்கார்ந்து விட்டார்! செண்பகம் பதறினாள்.

''ரஞ்சிதம்... நீ உசுரோட இருக்கியா... இல்ல அந்த பாவி உன் உசுரையும் வாங்கிட்டானா.... ரஞ்சிதம்மம்...'' - அவள் மூக்கைச் சிந்தினாள். அப்படியே மயங்கியும் விழுந்துவிட்டாள்.

மதியம் சரியாக 12 மணி! பாண்டித்தேவன் பட்டி பஞ்சாயத்து துணைத்தலைவர் சண்முகம் ஒரு ஊர் வேனில் தாமோதரன் நம்பூதிரியுடன் எல்லையை தொட்டிருந்தார். எல்லைப் பலகையை பார்த்த நம்பூதிரி வேனை நிறுத்தச் சொல்லி இறங்கினார். தலையில் ஏராளமான முடி... அதை முடிந்து கொண்டு முன்பக்கமாய் இழுத்து விட்டிருந்தார். நெற்றியில் பட்டையாக சந்தனம். புருவத்தில் பிறருக்கு தெரியாதபடி துஷ்ட சக்திகளுக்கு எதிரான மை! திறந்த மார்பு! அதை ஒரு துண்டால் மூடியிருந்தார். இடுப்புக்கு கீழே கச்சவேட்டி. காலில் கறுப்பு வண்ணத்தில் செருப்பு!

இறங்கியவர் பெயர் பலகையை பார்த்துவிட்டு நாலா புறமும் திரும்பிப் பார்த்தார். நெற்றி சுருங்கியது. சுவாசத்தை இழுத்துவிட்டார். பின்

ஏதோ முணுமுணுத்து விட்டு திரும்ப வேனில் ஏறிக் கொண்டார். வேன் ஊருக்குள் புகத் தொடங்கியது.

சக்கர உருளலால் ஒரே புழுதிக்கவளம்... ஊர் முகப்பில் பஞ்சவர்ணம் ஏராளமான பேர்களுடன் காத்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் சுரத்தில்லை. கூட இருப்பவர்கள் வேல் கம்பு அரிவாள் என்று ஏதோ யுத்தத்துக்கு போகப் போகின்றவர்களைப் போல காட்சி அளித்தார்கள்.

சண்முகத்துக்கு அவரைப் பார்க்கவுமே விளங்கிவிட்டது. வேனை நிறுத்திவிட்டு இறங்கிக் குதித்து ஓடி வந்தார்.

''சண்முகம்.. வந்துட்டீங்களா?''

''வந்துட்டேன் தலைவரே... உங்க மகளைக் கூட காணோம்னு நீங்க போன்ல சொன்னப்ப பக்குன்னுச்சு. சாமி கிட்டையும் சொன்னேன். சாமி கேட்டுட்டு கண்ண மூடி ஒரு வினாடி யோசிச்சவர் 'ரஞ்சிதத்துக்கு எந்த ஆபத்தும் இல்லே'ன்னார்... தைரியமா இருங்க.'' - என்றார் சண்முகம்.

தாமோதரன் நம்பூதிரியும் இறங்கினார். பார்வையில் ஒரே துழாவல்!

''சாமி எல்லைல இருந்தே நோட்டம் போட்டுகிட்டு வர்றாரு''- என்றார் சண்முகம் நம்பூதிரியும் பார்த்தது போதும் என்று பேச ஆரம்பித்தார்.

''இங்கன யாருக்கு ஆவி பிடிச்சு?''

''என்ன சாமி கேக்கறீங்க - விளங்கலீங்க..''

''எந்தா இது... மனசிலாயில்லா... ஆவி... அதாவது செத்த உசுர் ஒருவனை பிடிச்சு ஒருவனைக் கொன்ன தல்லே... அது ஆராணு...''

''ஓ... அவரா? அவர் பேர் தர்மலங்கம் சாமி. வயசானவர் - பாவம்...''

''ஞான் அவரை நோக்கட்டே...?''

''தாராளமா சாமி...'' - எல்லோரும் அவருடன் தர்மலிங்கம் வீட்டுக்கு சென்றனர். தர்மலிங்கம் பயத்தில் உள்ளே கட்டிலில் படுத்திருந்தார். தட்டி எழுப்பி அழைத்து வந்தனர். கூட்டத்தை பார்த்து



போலீஸ் தான் வந்து விட்டதாக எண்ணியவர் பிறகுதான் நம்பூதிரியைப் பார்த்து சமாதான மானார். நம்பூதிரியும் அவரை சுற்றிவந்து பார்த்தார். பிறகு விபூதி எடுத்து மந்திரித்து அவர் மீது போட்டார். தர்மலிங்கம் மலங்க மலங்க முழித்தார்.

அதன்பின் நம்பூதிரி சண்முகம் பக்கமாக திரும்பி ''ஆ பனங்காடு எங்கோட்டு உண்டு?'' - என்று கேட்க அனைவரும் பனங்காடு நோக்கி நடந்தார்கள். ''பெரிய பனங்காடு சாமி... அந்த காலத்துல திருட்டுப் பயலுங்க அதுக்குள்ள தங்கியிருந்துதான் திருடப் போவாங்களாம். காட்டுக்குள்ள நரி கரடி எல்லாம் கூட உண்டு. மேடும் பள்ளமுமா நிறைய குகைங்களும் இருக்குது.''

பனங்காட்டுக்கு சண்முகமே விளக்கமளித்து முடித்தார். அனைவரும் பனங்காடு நோக்கி நடக்கத் தொடங்கினர். கூட்டமாய் போவதாலும் நம்பூதிரி இருப்பதாலும் பெரிதாய் பயம் யாரிடமும் இல்லை.

பனங்காட்டு முகப்பிலேயே வட்டமிடும் கழுகுகள் எல்லோரையும் மிரளவைத்துவிட்டது. ''காலைல ஐம்பது அறுவது கழுகுங்கதான் இருந்துச்சு. இப்ப அது நூறாயிடிச்சு... உள்ள மனுஷ உடம்பு இருந்தா தான் இப்படி ஆகும்... யாரு செத்து கிடக்கறாங்களோ?''

''மாயனும்... அந்த சீட்டாட்ட கோஷ்டியும் தான் நேத்து அந்த பக்கம் போனாங்களாம்...''

''கூறு கெட்டவனுங்க... சாவறத்துக்குன்னே போயிருக்கானுங்களே...''

பேச்சும் முணுமுணுப்புமாக நடந்தனர். நம்பூதிரி நடையில் நல்ல கம்பீரம். நடுநடுவே சண்முகம் காதில் மட்டும் அவர் ''இவ்விட ஒரு பயங்கரமும் இல்ல... கெட்ட ஆத்மாக்கள் உள்ள இடம் இப்படி இருக்காது.'' என்று சொன்னதுதான் ஆச்சரியம்.

பனங்காட்டுக்குள் நுழைந்த போது அவர்

www.cleanindians.com

களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. மாயனும் மற்றவர்களும் மூலைக் கொருவராக பிய்ந்து போயிருந்தனர். நரிகளும் கழுகுகளும் தின்ற மிச்சமாகக் கிடந்தனர்.

''ஓ!''

எல்லோர் முகமும் விசாரத்தில் மூழ்கிப் போனது. சிலர் கண்களை மூடிக் கொண்டனர். நம்பூதிரி மட்டும் பழகிய காட்சி போல பார்த்தார். அப்படியே அண்ணாந்து பனை மரங்களையும் ஒருபார்வை பார்த்தார்.

கீழே தரைப்பரப்பில் ஒரு இடத்தில் ரஞ்சிதத்தின் செருப்பு கிடந்தது. அதைப் பார்க்கவும் பஞ்சவர்ணத்துக்கு இதயம் கிடந்து திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

நம்பூதிரியோ மரங்களுக்கு நடுவில் சுற்றி சுற்றி வந்தார். கழுகுகள் அவ்வளவும் பனை மரங்களின் மேல் எறிக் கொண்டிருந்தன. நரிகள் ஓடி ஒளிந்து கொண்டுவிட்டன.

''தலைவரே இது பெரிய கொடுமை.''- என்று சிலர் அழவே ஆரம்பித்து விட்டனார். நம்பூதிரி சுற்றி முடித்துவிட்டு திரும்பி வந்தார். எல்லோரையும் பார்த்து ''இ பிரேதத்தை இங்கேயே பெட்ரோல் ஊத்தி எரிக்கும்... பின்னே ஊரிலுள்ள எல்லா வீடுகளிலும் பால் வாங்கி அதைக் கொண்டு வந்து தெளிச்சால் இ ஆத்மாக்கள் சாந்தி அடையும்'' - என்றவர் சண்முகத்தை திரும்பவும் அழைத்து காதில் ஏதோ சொன்னார். சண்முகத்தால் அதை நம்ப முடியவில்லை. பஞ்சவர்ணமும் கேட்டார்.

''என்ன சொல்றார் நம்பூதிரி?''

''இது எதுவும் கெட்ட ஆவி பண்ணது இல்லையாம்.''

''அப்படின்னா...?''

- பஞ்சவர்ணம் பதிலுக்காக சண்முகத்தை பார்த்தபோது அவர் மனைவி செண்பகம் செல்போனை எடுத்துக் கொண்டு ''என்னங்க என்னங்க'' என்றபடி ஓடிவந்து கொண்டிருந்தாள்.

''செண்பகம் வர்றா... என்னன்னுகேளு...'' -

www.cleanindians.com



அதற்குள் செண்பகமே வந்து செல்போனை நீட்டினாள். அதில் ரஞ்சிதத்தின் குரல்!

''அப்பா...''

''ரஞ்சிதம்... நீயா?''

''நானே தாம்ப்பா.''

''எங்கடா கண்ணு இருக்கே...?''

''நான் இப்ப மதுரைல ஆஸ்பத்திரில இருக்கேன். அவரு என்னை கடத்திகிட்டு கார்ல போனப்போ சத்தம் போட்டு கிட்டே கதவைத் திறந்துகிட்டு குதிச்சிட்டேன். அதுல நல்ல காயம். என் நல்ல நேரத்துக்கு ஒரு பஸ் பின்னாலயே வந்துச்சு. அதுல இருந்தவங்க இறங்கி வரவும் அவர் ஓடிட்டாரு. அவங்கதான் என்னை ஆஸ்பத்திரில சேர்த்தாங்க...''

''என்னம்மா சொல்றே...? ஞானசேகரன் ஆவி உன்னைக் கொலை பண்றதுக்கு முந்தி தப்பிட்டியா நீ...?''

''அவர் சாகலைப்பா... எல்லாம் பொய். அவர், அவர் நண்பர்கள் எல்லாருமே தீவிரவாதிங்கப்பா. ராணுவத்துலையும் இப்ப அவங்க இல்லை. அவங்க ரகசியமா ஒளிஞ்சு செயல்பட, அவங்களுக்கு நம்ம ஊர் பனங்காடு தேவைப்படவும் பேய் பிசாசு நாடகம் போட்ருக்காங்க. மல்லிகாவை கெடுக்கற மாதிரி நடிக்கவும் போலி துப்பாக்கியால மல்லிகா சுட்டுருக்கா. அதுல செத்த மாதிரி நடிச்சு ஏமாத்திட்டாங்க. அப்புறமா காளிமுத்து, அருணாசலத்தையும் ஆவி கொன்ன மாதிரி செட்டப்புல தான் கொலை செய்திருக்காங்க. பனங்காட்டை நல்லா தோண்டிப் பார்த்தா ரிமோட்ல இயங்கற மெஷின் கைங்களும், வெடி குண்டுகள், துப்பாக்கிங்கல்லாம் இருக்கும்...''

- ரஞ்சிதம் சொல்லச் சொல்ல பஞ்சவர்ணத்துக்கு தலையை சுற்றிற்று. அப்படியே செல்போனை மூடிக் கொண்டு ''டேய் பேயும் இல்ல பிசாசும் இல்ல. எல்லாம் செட்டப்பாம். பனங்காட்டை தோண்டுங்க. துப்பாக்கி, குண்டு, எந்திரக் கைன்னு ஏதேதோ இருக்குதாம்.''

- பஞ்சவர்ணம் ஓங்கின குரலில் கட்டளையே போட்டார்.

ரஞ்சிதம் தொடர்ந்தாள்.

''ஞானசேகரன் மாமாக்கு என் மேல் இருக்கற ஆசைமட்டும் குறையல. என்னை தூக்கிட்டு போய் தாலிகட்டிகிட்ட பிறகு நான் மடங்கிப் போயிருவேன். நீங்களும் மாப்ளைன்னு காட்டிக் கொடுக்க மாட்டீங்க. ஊரும் எப்பவும் பயந்துகிட்டு அந்த பக்கமே வராது. அவங்களும் எல்லா சதித்திட்டத்தையும் காட்டுக்குள்ள உக்காந்து போடலாம்கறது எண்ணம்.

என்னை கடத்திகிட்டு போய் பனங்காட்டுக்குள்ள வெச்ச அவர் பேசினப் போவே எல்லாம் புரிஞ்சி போச்சு. மாமாவுக்கு ஊருக்குள்ளையும் தர்மலிங்கம் தாத்தா மாதிரி சிலர் தயவு இருக்கு...'' - என்று கூறவும் மொத்த குழப்பங்களும் தீர்ந்து பஞ்சவர்ணம் மூச்சில் ஒரு நிம்மதிப் பெரு மூச்சு.

நம்பூதிரி இனி தனக்கு ஒரு வேலையும் இல்லை என்பதுபோல கைஎடுத்து கும்பிட்டுவிட்டு வேனில் ஏறப்போனார். அதுவும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்திருந்தது. பஞ்சவர்ணம் அவரிடம் சென்று-

''நீங்க ரொம்ப நல்லவர் சாமி. அவ்வளவு தான் இப்ப என்னால் சொல்ல முடியும்.''- என்றார். நம்பூதிரி சிரித்தார்.

சண்முகம் போலீசுக்கு தகவல் தந்து விட்டதாக கூறினார்.

''சண்முகம்... எவ்வளவு பெரிய ஆபத்துல மாட்டத் தெரிஞ்சோம் இல்ல...'' - என்று கேட்க, ''நீங்க ரஞ்சிதத்தை கூட்டிகிட்டு வர கிளம்புங்க... மத்த விஷயங்களை நான் பாத்துக்கறேன்.'' என்றார் சண்முகம் ''பாவம் இந்த மாயனும்... மத்தவங்களும். இப்படி அநியாயமா செத்துட்டானுங்களே...'' என்ற பஞ்சவர்ணம் நம்பூதிரி ஏறிக் கொண்ட வேனிலேயே ஏறிக் கொண்டார். அதுவும் ஓட ஆரம்பித்தது. உள்ளே நம்பூதிரி சொன்னார்.

www.cleanindians.com



''நிஜப்பேய்கள் மனிதப்பேய்கள் அளவு தப்பு பண்ணாது தலைவரே!'' - பஞ்சவர்ணத்துக்கு அது ஆயிரத்தில் ஒரு வார்த்தையாக தோன்றியது.

(முற்றும்)



'பாக்கெட் நாவல்'

வாசகர்கள்-
விற்பனையாளர்கள்-
ஏஜண்ட்டுகள்
அனைவருக்கும்

எமது
61-வது இந்திய சுதந்திர தின
வாழ்த்துக்களை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறோம்.

- ஆசிரியர்-

உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5. ஆசிரியர்: ஜி. அசோகன். தொலைபேசி: 28544294